# திராவிடநாடு



அண்டசராசரத்தையும்ஐயன் உண்டாக்கியதாக கூறிப் பெருமைப்படுகிறார்களல்லவா? அந்த ஐயனையே சவாலுக்கு இழுக்கிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள்! விரைவில், சந்திரனுக்குப் போட்டியாக ஒரு செயற்கைச் சந்திரனை இவர்கள் ஆகாயத்தில் விடப்போகிறார்கள். பூமியில் இருந்து 1500 மைல் தொலைவிற்கு இது செல்லுமாம். பூமியைச் சந்திரன் சுற்றுவது போலவே, இந்தச் சந்திரனும் சுற்றுமாம். இந்தச் சந்திரன், இப்போதுள்ள விஞ்ஞான ஏற்பாட்டுப்படி, நான்கு வாரங்கள் மட்டுமே வானத்தில் நிலைக்குமாம். வருகிற ஜனவரியில், இந்த இந்த முயற்சி பரீட்சிக்கப்படப் போகிறது.

*

எலிகள் பூனைகளை வேட்டையாடுகின்றன! கதையில் அல்ல, வாழ்க்கையில். பர்மாவிலுள்ள ஷான்ஸ்டேட்ஸில், கெங்டங் கிராமத்தில் எலிகள் தொல்லைப் பொறுக்க முடியவில்லையாம். நெல் களஞ்சியங்களையெல்லாம் கூட்டம் கூட்டமாக வந்து பாழ் செய்துவிடுகின்றனவாம். இதைக் கண்ட ஊரார், பூனைகளைக் களஞ்சியங்களுக்குப்பாதுகாப்பாக வைத்துக் கொண்டார்களாம். எலிகள் பூனைகளைப் பொருட்படுத்தவில்லை! என்ன செய்வதென்று விழித்த மக்கள், இரவுக்காலங்களில், தாங்களே காவலிருக்க ஆரம்பித்தார்கள். எலிகள் அவர்களுக்கும் பயப்படவில்லையாம். என்ன செய்வதென்று தெரியாமல் மக்கள் சங்கடப்படுகிறார்களாம்.

*

டாக்டர் வேலை பார்க்கும் பெண்கள் வாசனை தரும் பூக்களை அணியக்கூடாதாம்--மணம் தரும் மலர்களை அணிவதால் வேறு மணங்களை நுகர முடியாது போகிறதாம். இந்தப் பூ அணியா முறை சென்னை வைத்தியக் கல்லூரியில் பின்பற்றப்படுகிறதாம்.

*

நான்காண்டுகள்! ஒருகமிஷன் நாடெல்லாம் சுற்றி பல விபரங்களைச் சேகரித்தது. அந்த

## கேட்டீரா! சேதி!

அறிக்கையை, டில்லி, குப்பைத் தொட்டியில் வீசியெறிந்துவிட்டது. நாட்டிலிருக்கும் பிற்பட்ட வகுப்பினரின் பட்டியலைச் சேகரிக்க டில்லியால் நியமிக்கப்பட்ட கமிஷன்தான் அது. இந்தியாவில் மொத்தம் 2399 வகுப்புகள் பிற்பட்ட நிலையிலிருக்கின்றனவென்றும், பாதிப்பேர்(15 கோடி) அநேகமாக இதே கதியில் கிடப்பதாகவும், மேற்படி கமிஷன் முடிவு செய்தது. அதைக்கண்ட டில்லி, மிரண்டுபோய், கமிஷன் அறிக்கையை வீசியெறிந்துவிட்டது! இந்தக் கமிஷனுக்காகச் செலவான தொகை யாருடையது என்கிறீர்களா? நமது வரிப்பணம்தான்!

*

ஆச்சாரியாருடைய புதல்வர் சி. ஆர். நரசிம்மன் என்பவர் பார்லிமெண்டு உறுப்பினராயுள்ளாரல்லவா? அவர் அண்மையில் அதிமுக்கியமான மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார். அதன்படி, விரைவில் ஒரு தேசிய பிலிம் போர்டு அமைக்கப்படுமாம். அது, சினிமா வசனங்களை, முதலிலேயே பரிசீலித்து 'கத்தரிக்கோல்' செய்யுமாம். சினிமாக்களின் தரத்தை அபிவிருத்தி செய்யவே இந்த ஏற்பாடாம். இப்போதிருக்கிற 'சென்சாரு'க்கு அண்ணன் இது! பிரதம நீதிபதி ராஜமன்னாரே ஒருமுறை 'சென்சார்' முறைகளைக் கண்டித்தது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

*

வட ஆஸ்திரேலியக் கடலில் அண்மையில் பெரியதொரு முத்து எடுக்கப்பட்டிருக்கிறது. இது உலகத்திலுள்ள பெரிய முத்துக்களில் மூன்றாவதாகும்! நாலணா அளவுள்ள இது இலட்சக் கணக்கான ரூபாய்க்கு விலை போகலாம்.

*

அண்மையில் இங்கிலாந்திலுள்ள பிரைட்டன் எனுமிடத்தில் நடந்து முடிந்த பிரிட்டிஷ் தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் மாநாட்டில் ரசமான விவாதம் ஒன்று நடந்ததாம். மேற்படி தொழிற் சங்க காங்கிரசில் தொடர்பு கொண்டிருக்கும் டாக்டர்கள் சங்கச் சார்பில் சிறுவர்கள் புகை பிடிப்பது தடுக்கப்பட வேண்டுமென்றும், கடந்த 19 ஆண்டில் கான்சர் வியாதி அதிகமாகக் காரணம் இதுதானென்றும் கூறி ஒரு தீர்மானம் கொணரப்பட்டது. இதை சுருட்டுத் தொழிலாளர் சங்கம் எதிர்த்தது. எந்த டாக்டரும் இதுவரை புகை பிடிப்பதால் இன்னின்ன நோய்கள் வருகின்றன என்று வரையறுக்கவில்லை என்றும் ஆகவே இப்படியொரு தீர்மானம் அவசியமில்லையென்றும் கூறிற்று. கடைசியில் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டபோது சுருட்டுத் தொழிலாளர்களே வெற்றி பெற்றனர்!

*

சர் தாமஸ் வில்லியம்சன் என்பார் பிரிட்டிஷ் தொழிற் சங்க காங்கிரசின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் பார்லிமெண்டு உறுப்பினர்.

*

அண்மையில் சோவியத் யூனியனில் ஒரு புது மாதிரி அணுகுண்டு வெடிக்கப்பட்டதாம். இச் செய்தியை ஜப்பானின் விஞ்ஞானி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கோகைடோவில் இருந்து தென் மேற்கு ஜப்பான் வரையில் இதனால் கதிரியக்க மழை பெய்திருக்கிறதாம். கதிரியக்கச் சாம்பலை பரிசோதனை செய்து பார்த்ததில் அது ஒரு 'புது மாதிரி' அணுகுண்டாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்களாம்.

★

# மூதறிஞர் கேட்கிறார்

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [23 9—56] தனிப் பிரதி 2 அணா [ இதழ் 12

**மொழிவழி அரசு**—புரியக்கூடியது—மணமளிக்கத்தக்கது-ஒற்றுமை, தோழமை எனும் உயர் பண்புகள் பூத்திடத்தக்க சூழ்நிலை தரத்தக்கது, காந்தியார் கொண்டிருந்த இலட்சியம்; காங்கிரஸ் மக்களுக்கு அளித்திருந்த வாக்குறுதி.

**மொழிவழி அரசு** தீதானது, தேவையற்றது, என்று பேசுபவர்கள், பிறகு ஏன், நாட்டிலே 'ராஜ்ய சீரமைப்பு' என்ற திட்டம் கொண்டுவரவேண்டும்?

இந்தியப் பேரரசுக்கு உட்பட்டு பல ராஜ்யங்கள் உள்ளன — அவை மொழிவழி இல்லை—மொழிவழி சீரமைப்பு ஏற்பட்டால், அந்தந்த மொழிவழி அரசுக்கு என்று இயற்கையாக அமைந்துள்ள பண்பு, வசதி, ஆற்றல் ஆகியவற்றுக்கு ஏற்ற வண்ணம், வலிவும் பொலிவும் மலரும் என்பது, மொழிவழி அரசுத் திட்டம் கோரிடுவோர் கூறும் 'நல்லறிவுத் துணைகொண்ட' பேச்சாகும்.

மொழிவழி அரசு தேவையில்லை என்று பேசுவோர், இதனையும் ஏற்றுக்கொள்ளாமல், இருக்கும் அமைப்பே போதும் என்றும் வாளா இராமல், கொள்கை ஏதுமற்ற முறையில், ஏற்கனவே அமுலில் உள்ள அமைப்பு முறையை, மாற்றிப் புதுமுறையில் ராஜ்யங்களை அமைத்திட முற்பட்டது ஏன்?

மூதறிஞர், விசுவேசரய்யா, கேட்கிறார்!

ராஜ்ய சீரமைப்பு என்கிறீர்களே, இந்தத்திட்டத்தின் நோக்கம் என்ன? என்று கேட்கிறார்.

இவரையும், பதவி ஆசை பிடித்தவர், பிளவு மனப்பான்மையினர் என்று ஒதுக்கிடும் அளவுக்குக் காங்கிரஸ் மேலிடத்துக்குத துணிவு இருக்காது.

விசுவேசரய்யா கேட்கிறார், சரிசம அளவுள்ள ராஜ்யங்கள் அமைக்கப்படவேண்டும் என்பது உங்கள் நோக்கமா? அல்லது சரிசம அளவுள்ள மக்கள் தொகை கொண்டதாக ராஜியங்கள் இருக்கவேண்டும் என்பதா? ராஜ்ய சீரமைப்புத் திட்டத்தில் உங்கள் நோக்கம் என்ன? என்று கேட்கிறார்.

ரரஜ்ய சீரமைப்பு, தெளிவற்ற முறையில், எந்த ஒரு கொள்கையுமற்ற போக்கிலே அமைந்திருக்கிறது என்று இடித்துரைக்க, இதனினும் நாகரீகமான முறையினை எவரும் கண்டறிய இயலாது.

உங்கள் போக்கே புரியவில்லையே, நோக்கம் தெளிவாக இல்லையே, ஏனய்யா இப்படி ஆணுமற்றுப் பெண்ணுமற்றுக் கிடக்கவேண்டும் என்று கேடகும் விசுவேசரய்யா இந்திய சர்க்காரில் இன்று கோலோச்சுவோருக்குப் பகைவரல்ல, உற்ற நண்பரே ஆவார்.

அவருக்கே சகிக்கவில்லை, இந்திய சர்க்காரின் அர்த்தமற்ற திட்டம்.

பொதுவாக மொழிவழி அரசுக்கும், சிறிய அளவுள்ள ராஜ்ய அமைப்புக்கும், நேரு பண்டிதர், நீண்டகாலமாக ஆதரவளித்துவந்தார்.

இப்போது, காரணமற்று, மொழிவழி அரசும் சரியில்லை, சிறிய ராஜியமும் போதாது, பெரிய ராஜ்யம்தான் தகுந்த திட்டம் என்று பேசுகிறார்.

பெரிய ராஜ்யம் என்பதற்கு என்ன பொருள் கொள்கிறீர்கள்,என்று நிபுணர் கேட்கிறார்.

நாட்டின் பரப்பு எவ்வளவு என்பதைப் பொறுத்தா, அல்லது அதில் உள்ள ஜனத்தொகையின் அளவைக் கணக்கிட்டா, நீவிர் பெரிது சிறிது என்று ராஜ்யங்களை ஆக்குவது என்று கேட்கிறார்.

இத்துணை குழப்பத்துக்கு இடமளிக்கும் முறையில் ராஜ்ய சீரமைப்பு செய்து, கண்ட பலன் என்ன?

மொழிவழி அரசு கிடைக்கவில்லை என்ற ஏக்கமும் கோபமும், ஒருபுறம்!

ஒன்றோடொன்று கலந்து உறவாடி வாழ முடியாத பகுதிகளை ஒன்றாக்கிவிட்டதாலே, அந்த 'ராஜ்யம்' எதிர்காலத்தில் களமாகும் என்ற அச்சம் மற்றோர் புறம்.

உரிமை புறக்கணிக்கப்படுகிறது, உடைமைபறிபோய் விட்டது என்ற வேதனை பிறிதோர் புறம்

இந்த மனக்குமுறல், கிளர்ச்சி வடிவெடுத்து, அதனை ஒடுக்க அடக்குமுறை அவிழ்த்து விடப்பட்டு, மக்களின் இன்னுயிர் குடிக்கப்பட்ட கொடுமை எங்கும் தலைவிரித்தாடிடக் கண்டோம்.

இதனைக் கண்ட மூதறிஞர், கேட்கிறார், நோக்கம் என்ன உமது ராஜ்ய சீரமைப்புத் திட்டத்துக்கு என்று?

தெலுங்கு மொழி பேசும் பகுதி ஹைதராபாத்திலிருந்து எடுத்து ஆந்திரத்துடன் இணைக்கப்பட்டு, புதிய ராஜ்யம் அமைத்திருப்பதைக் காணும்போது, மொழிவழி அரசுபோல், திட்டம் தெரிகிறது, அதேபோது தமிழரே மிகப் பெரும்பாலானவர்களாக உள்ள பகுதிகளை ஆந்திரத்தில் சேர்த்திருப்பதைக் காணும்போது, மொழிவழி அரசுக் கோட்பாடு குலைக்கப்பட்டிருப்பது தெரிகிறதே—அரசினரே! உங்கள் திட்டத்துக்கு என்னதான் நோக்கம், என்று கேட்காமலிருக்க முடிகிறதா! மூதறிஞர் கேட்கிறார்.

மராட்டிய மண்டலம், அமையும், ஆனால் பம்பாய் மட்டும் மராட்டியருக்கு இல்லை என்ற பேச்சு—பொருளற்றது—கொள்கை ஏதும் அற்ற கொடுமைத் திட்டம் என்று மராட்டியர் சீறி எழுந்தனர் — மண்டை பிளக்கும் விழா நடத்தினர் காங்கிரசாட்சியினர். பசி தீருமளவுக்கு பலி பெறுக! என்று வீரமுழக்கமிட்டனர் மராட்டியமக்கள், உடனே, மராட்டியருக்கு மராட்டியம் என்ற திட்டம் இனி இல்லை, மராட்டியமும் குஜராத்தும், ஒரே ராஜ்யமாகி விடும் என்று புதுத்திட்டம்புகுத்தப்பட்டது; அதனை எதிர்த்த குஜராத்திகள் கொல்லப்பட்டனர்.

இப்படி அலங்கோலம் நேரிடுகிறதே—நோக்கம் ஏதாவது இருக்கிறதா உங்கள் சீரமைப்பு திட்டத்துக்கு என்று மூதறிஞர் கேட்கிறார்.

ராஜ்ய புனரமைப்புக்கு முன்பிருந்த நிலைமையைவிட மோசமான நிலைமையை எதற்காக தற்போது உண்டாக்கவேண்டும்? என்றும் விசுவேசரய்யா கேட்டிருக்கிறார்.

ராஜ்ய சீரமைப்புத் திட்டத்தைக்குறை கூறி, கிளர்ச்சி நடத்துபவர்களை, பிளவு மனப்பான்மையினர் பேத புத்திகொண்டோர் என்றெல்லாம் கண்டிக்கும் நேரு பண்டிதர், மூதறிஞர் விசுவேசரய்யாவின் கேள்விக்கு என்ன பதில் அளிக்கிறார்.

நான் முதலமைச்சர்! என்பதன்றி வேறென்ன பதில் இருக்கிறது!!

★

காஞ்சீபுரம்
23—9—'56

# தம்பி !

நிதியமைச்சர் சுப்ரமணியனுர் போர்க்கோலத்துடன் வந்து நிற்கிருர். மெத்தக் கோபத்துடன் அவர் இருக்கிருர் என்பதும் தெரிகிறது, கோபம் ஏன் அவ்வளவு கொந்தளிக்கிறது என்பதும் புரிகிறது.

செல்லுமிடமெல்லாம் அவருக்குச் சொல்லுகிருர்கள் 'ஊழியர்கள்' — நமது கழகம் வளர்ச்சி அடைந்திருப்பதனை!

"கூட்டம் குறைவுதான்"

"பரவாயில்லையே! சென்றமாதம் காமராஜர் வந்தபோது இதிலே கால்வாசிதான் இருக்கும்"

"அப்படியா... இந்த ஊரில் மக்களுக்குப் போதுமான அரசியல் விழிப்புணர்ச்சி இல்லை... பொதுக்கூட்டத்திற்கு வருவதில் ஆவல் எழாததற்கு அதுதான் காரணமாக இருக்கவேண்டும்..."

"அப்படிச் சொல்லிவிடுவதற்கில்லை..."

"ஏன்?...என்ன...!"

"முன்னேற்றக் கழகத்தார் கூட்டம் போட்டால்...!"

"முன்னேற்றக் கழகம் ஒரு கட்சியா?...... அடுக்குமொழி பேசிடும் ஆள் மயக்கிக் கூட்டம். அதுகளுக்கு அரசியல என்ன தெரியும்......"

"அதுசரி, அதுசரி......ஆனல் இந்த ஜனங்கள்..."

"குப்பையில் தள்ளுங்கள்...... பெரிய கூட்டமா அவர்கள் வந்தபோது?"

"ஆமாம்...... பிரமாண்டம்...... அதைப் பார்த்த பிறகுதான் நம்ம பேச்சிமுத்து, தேர்தலில் இறங்கவே தயங்குகிருர்."

"அப்படியா! இன்று வெளுத்து வாங்கிவிடுகிறேன், முன்னேற்றக் கழகத்தை..."

இப்படி உரையாடல் நடந்தான பிறகு, பொதுக்கூட்டம் சென்றிடவும் 'பிரமுகர்கள்' அவரை வரவேற்கவும், பொதுமக்கள் ஆர்வம் காட்டாமலிருக்கவும் கண்டவுடன், நிதி அமைச்சருக்குக் கோபம் கோபமாக வருகிறது, கொக்கரிக்கிருர்.

இந்தக் கிழமை, தம்பி, சென்ற இடமெல்லாம், எங்கே அந்த அண்ணுத்துரை? பிடித்திழுத்து வாருங்கள்!—என்று கேட்பது போலவே, சீற்றத்துடன் பேசியிருக்கிருர். நான வருத்தமடைகிறேன், மெத்தவும் அவருக்கு 'வேலை' கொடுத்துவிட்டதற்காக.

# அறைகூவுகிருர் அமைச்சர்!!

திட்டம் எங்கே? திட்டம் எங்கே? காட்டட்டும்! நீட்டட்டும்! பார்க்கிறேன்! நிபுணர்களை, அழைக்கிறேன்! அவர்கள் அளித்திடும் தீர்ப்பை ஏற்கிறேன்! என் பதவியைக்கூடத் துறக்கிறேன்!— என்று ஒரே வீராவேசமாகப் பேசியிருக்கிறார்.

தேர்தல் நேரமல்லவா—தீ பறக்க வேண்டுமே—அப்போதுதானே ஐம்பது ஆயிரமானாலும் இலட்சமானாலும் பரவாயில்லை என்று வீசி எறிந்து தேர்தல் வேட்டையில் ஈடுபட 'ஆட்கள்' தைரியம் பெறமுடியும். அதற்காகப் பாபம், அமைச்சர் ஆலாய்ப் பறக்கிறார், 'ஆலகாலம்' கக்கப்பார்க்கிறார். அவர் உதிர்த்துள்ள 'முத்துகளை' சிந்தாமல் சிதறாமலெடுத்து ஏடுகள் வெளியிட்டுத் தமது தேசியத்தைத் தெரிவித்துக்கொண்டுள்ளன! தேசியத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அந்த ஏடுகள், மககளுக்குத் தெளிவும் அளிக்க வேண்டும் என்ற பொறுப்பையும் கவனித்து நடப்பதானால், நான் எடுத்துக் கூறும் பேச்சையும், குலைக்காமல் வெளியிட வேண்டும். அந்தப் பண்பு ஏது? இருந்தால் ஜனநாயகம் ஏன் இன்று கேலிக்கூத்தாகிக் கிடக்கிறது! அது கிடக்கட்டும். நீண்டகால வியாதி, உடம்போடு ஒட்டிக்கொண்டது!

என் மீது இத்துணை எரிச்சல் கொள்ள என்ன காரணம் நிதி அமைச்சருக்கு?

சாதாரணமாக, நிதி அமைச்சர், நம் பிரச்னைகளை — பேச்சுகளைத் தமது மேலான கவனத்துக்கு உரியன என்றே கருதுவது கிடையாது. நிதியும் மதியும், ஒருசேரத் தமமிடம் சிறைப்பட்டிருப்பதால், அவர் பண்டைக்காலப் பாதுஷாக்கள்போல,ஊர்ப் பிரமுகர்கள் தரும் உக்காவைப் பிடித்துக்கொண்டு, ஊஹூம்.... ஆஹாம்......பேசிக்கொண்டு உலா வந்தால்போதும், கழகத்தார் பற்றிக் கவனிப்பதே, தமது மேலான நிலைக்கு ஏற்றதாகாது என்று எண்ணிக்கொள்பவர், எனினும் இந்தக் கிழமை முழுவதும் அவர், கரூரிலும், மதுரையிலும், திருச்சியிலும் செல்லுமிடமெங்கணும், பொதுவாக முன்னேற்றக் கழகத்தையும், குறிப்பாக என்னையும் 'போடு போடு' என்று போட்டுவிட்டதாகக் கருதிக்கொண்டு தம்முடைய பலவீனத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறார்.

1. திராவிட முன்னேற்றக் கழகம் சரியான முறையில் அமைந்த எதிர்க்கட்சி அல்ல.
2. திராவிட முன்னேற்றக் கழகத்தாருக்கு அரசியலே தெரியாது.
3. அடுக்குமொழி பேசுவார்கள்—அனுவசியமாக எதிர்ப்பார்கள்.
4. அவர்களுக்கு நாட்டிலே ஆதரவே கிடையாது.

இவை நிதியமைச்சரின் மொழிகள் —மதிமிகு மொழிகள் என்று அவர் எண்ணிக்கொண்டிருக்கிறார்— அவராவது அவ்விதம் எண்ணிக்கொள்ளாவிட்டால், வேறு யார் துணைவரப்போகிறார்கள்.

எதிர்க்கட்சி என்பதற்கு என்ன இலக்கணம் காண்கிறார் நிதி அமைச்சர் — அவர் படித்துள்ள அரசியலில் — படித்திருந்தால்!— என்று அறியநான் மிகவும் ஆவல் கொண்டுள்ளேன்.

அவர் பேசுவதிலிருந்து, நான் யூகித்துக்கொள்ள என்ன இருக்கிறது?

கம்யூனிஸ்டு கட்சி கெட்டது.

சோஷலிஸ்டுகள் கெட்டவர்கள்.

முன்னேற்றக் கழகம் மிக மிகக் கெட்ட கட்சி.

இப்படி எல்லாவற்றையும் கண்டித்துவிட்டு, எதை எதிர்க் கட்சி என்று இவர் கூறுகிறார்? ஒரு சமயம், உண்மையான எதிர்க் கட்சி எப்படி இருக்கவேண்டும் என்பதை எடுத்துக் காட்டவே, காங்கிரசிலே இருந்தே சிலரை இவர் அழைத்துக்கொண்டு வெளியே கிளம்பி, எதிர்க் கட்சியாக்கி, அரசியல் 'சேவை' செய்யப் போகிறாரோ என்னவோ? யார் கண்டார்கள்!

ஆளும் கட்சியில் வளரும் சர்வாதிகாரத்தைக் கண்டிப்பது;

ஆளும் கட்சி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததை அம்பலப்படுத்துவது.

ஆளும் கட்சியின் அமுலில் ஏற்படும் அல்லலை, அவதியை எடுத்துக் காட்டுவது.

ஆளும் கட்சியின் சட்ட திட்டங்களும், நிர்வாக முறைகளும் ஏழைகளை எவ்விதத்தில் கெடுக்கிறது என்பதை எடுத்துரைப்பது,

ஆளும் கட்சி, என்னென்ன விதமான இதமளிக்கும் சட்டம் செய்திருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுவது. உரிமையையும் உடைமையையும் பறிகொடுக்கும் போக்கில் ஆளும் கட்சி நடந்துகொள்ளும்போது, கண்டிப்பது எதிர்த்துக் கிளர்ச்சி நடத்துவது,

இவைபோன்றவைதாம், எதிர்க் கட்சிகளுக்கு இருக்கவேண்டிய இலட்சணங்கள் என்று நான் படித்த — அதிக அளவு படிக்கவில்லை, ஆனால் படித்தவரையில் கவனத்துடன் படித்திருக்கிறேன் —அரசியல் விளக்க ஏடுகளில் காணப்படுகின்றன.

எதிர்க் கட்சிகளுக்கு இருக்கவேண்டிய இந்த இலட்சணங்கள், யாரிடம், எந்த வகையிலே இல்லை என்பதை எடுத்து விளக்கிட இந்த வீராதி வீரர் முன்வரவில்லை, —அதை விட்டு விட்டு ஓஹோ! இவைகளெல்லாம கட்சிகளே அல்ல, என்று கூறிவிடுகிறார்.

ஓநாயும் ஆட்டுக்குட்டியும் என்ற கதை உண்டல்லவா, அதுபோல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கத்தில் இன்ன தவறு, போக்கிலே இந்தவிதமான கோளாறு இருக்கிறது என்று எடுத்துக்காட்ட வக்கற்ற இந்த வக்கீல், இந்தக் கழகத்தார், முன்பு வெள்ளையர் ஆட்சியிலே வெண்சாமரம் வீசினவர்கள் என்று குதர்க்கம் பேசிவருகிறார்.

இன்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களில்—முக்கியஸ்தர்களில்—யார் வெள்ளையருக்கு வெண்சாமரம் வீசினவர்கள் —யார் பதவியில் இருந்தவர்கள்— யார் வெள்ளையனிடம் பணம் வாங்கி வேலைபார்த்தவர்கள், என்பதை எடுத்துக் காட்டும்படி, 'சூரசம்ஹார'க் கோலம் பூண்டு சுற்றி வரும் இந்தச் சுப்பரமணியனாரைக் கேட்கிறேன்,

எப்போது ஜஸ்டிஸ் கட்சி, சேலத்தில் திராவிடர் கழகமாக மாறிற்ரு, அன்றே, களங்கம் துடைக்கப்பட்டது. 'கழுவி விட்டதை'க் காங்கிரஸ் தங்கக் கலசத்தில் அல்லவா ஏந்திக்கொண்டது?

நாமறியோமா, நாடு அறியாதா, இந்தச் சேதியை?

வெள்ளையனிடம் சுளைசுளையாகப் பணம் பெற்றுக்கொண்டு, அவன் காலைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டவர்களை, கட்டி அணைத்துக்கொண்டது காங்கிரஸ் என்பதை விளக்க எத்தனை எடுத்துக் காட்டுவேண்டும்! மந்த மதியினரும் இதனை அறிந்துகொள்ள முடியுமே!

அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் யார்? அலிபுரம் சிறையில் அவதிப்பட்ட தேசியத் தொண்டரோ!! வெள்ளையர் ஆட்சியை ஒழித்திட வீரப் போரிட்ட சிதம்பரனருடன் கூடிச் செக்கிழுத்தவரோ! அன்னிய ஆட்சிக்கு அடங்கிக் கிடக்கமாட்டேன் என்று ஆர்த்தெழுந்த வைக்கம் வீரருக்கு வலது கரமோ? தேசத்தை அடிமை கொண்டவனுடன் உறவு கொள்ளமாட்டேன் என்று கூறி, 'உத்யோகத்தை' உதறி எறிந்த தியாகியோ? நாடு கேட்காதா, நாப்பறை அறையும் இந்த அமைச்சரை? ஐயா! அமைச்சரே! அண்ணாத்துரையும் அவன் சார்ந்துள்ள கழகத்தினரும், வெள்ளையரை ஒழித்திடும் வீரப் போர் புரிந்தவர்களல்லர், எனவே அவர்கள், எமது ஆட்சியிலுள்ள அலங்கோலத்தை எடுத்துக் கூறினால், கேளேன், எவரும் கேளார் என்று விசித்திர வாதம் புரிகிறீரே, இந்த அல்லாடி யார், கூறும் கேட்போம், என்ருல், பதில் ஏது கூறுவார்! நான் கூறுகிறேன், தம்பி, நாடறிந்த உண்மையை, அதை மறுத்திடவாவது முன்வருகிருரா, கேள் இந்த மந்திரியை!

அல்லாடி — ஒரு, சர்! ஆங்கில அரசு தந்த பட்டம், அட்வகேட் ஜெனரல் பதவி—ஆங்கில அரசு வீசிய எலும்புத்துண்டு என்றுரைக்கவேண்டும் அமைச்சரின் பாஷையில்! அவரை அல்லவா, அடிபணிந்து அழைத்து, இவர்கள், அரசியல் சட்டம் தீட்டும் வேலையைத் தந்தனர்!

தேசத்துரோகி—இவர் தீண்டக் கூடாது எமது விடுதலைச் சாசனத்தை என்ரு கூறினர்.

தேடித் தேடிப் பிடித்திழுத்து வந்தனர், தேசியத் தலைவர்கள்; அவர் திருவடி சரணம் என்று கிடந்தனர்.

அமைச்சரின் அறிவாற்றல் என்ன செய்துகொண்டிருந்தது? அல்லாடியை அழைக்காதே! அவமானத்தைத் தேடாதே! என்ரு இவர் ஆர்ப்பரித்தார்!

அல்லாடி, அரசியல் சட்டத்தைத் தீட்டிக்கொண்டிருந்தபோது இந்த அமைச்சர் இருந்த திக்கும் தெரியாது நாட்டு மக்களுக்கு! இன்று, இளித்து நிற்கவும், இனிப்பாகப் பேசவும், பதவியின் காரணமாக நாலு பேர் நத்திக்கிடக்கக் கிடைத்துவிட்டார்கள் என்பதனுல் உண்டான போதையில், போதகாசிரியராகிருர்—வெள்ளையன் காலத்தில் இந்தக் கழகத்தார் என்ன செய்தார்கள் தெரியுமா என்று விண்ணுரம் பேசுகிருர்.

கலெக்டர் வேலையில் காலடி வைத்து, காஷ்மீர் திவான் வேலை வரையில் உயர்ந்து, உள்ளே நுழையாதே! என்று உத்திரவிட்டு, நேரு பண்டிதரின் மார்புக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டிடும் துணிவுடன் துரைத்தனம் நடத்திய கோபாலசாமி ஐயங்காரல்லவா, மந்திரியானுர்! அப்போது. மானமும் ரோஷமும் எங்கே போய்க் குடிபுகுந்தது? வெள்ளை ஏகாதிபத்யத்தின் செல்லப் பிள்ளையாயிற்றே இந்த கோபாலசாமியார்! இவரைக் காங்கிரசாட்சியிலே காராக்கிரகத்தில் தள்ளுவார்கள், கண்ட இடத்தில் சுட்டுக் கொல்லுவார்கள், எந்தத் துப்பாக்கி முனையை நேரு பண்டிதரின் மார்பிலே வைத்தாரோ, அதே துப்பாக்கி முனையை இவருடைய முதுகிலே குத்தி விரட்டுவார்கள் என்றெல்லாம் முழக்கமிட்டனரே காங்கிரஸ் பேச்சாளர்கள், வெட்கமின்றி அவரை அழைத்து 'சோட சோபசாரம்' நடாத்தி, 'சுபசோபனம்' பாடி, பாதுகாப்பு இலாகா, மந்திரியாக்கிக் கொள்கிருமே, உலகு கைகொட்டிச் சிரிக்காதா, என்று, அன்று எண்ணிய தன்மானத் தலைவர் யார்? காட்டச் சொல்லுங்கள்! இன்று துள்ளி வருகுது வேல்! தூர விலகி நில்! என்று துந்துபி முழக்கிடும் இந்தத் தூயவராவது, வாய் திறந்தாரோ! இவர் இருப்பதையே நாடு கவனிக்கவில்லை அந்த நாட்களில்!! இன்று, வீரம் சொட்டுகிறது பேச்சில் — அன்று அசடு வழிந்தது இவர் போன்ருர் முகத்தில்! ஆங்கில ஆட்சியின்போது எத்துணை ஜொலிப்புடன் இருந்தாரோ, அதே பளபளப்புடன், கொலு வீற்றிருந்தார் கோபாலசாமி ஐயங்கார்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்திடும் வீரப்போருக்கு முத்துராமலிங்கத் தேவர் தேவைப்பட்டார்—இன்று பசும்பொன் இருக்க வேண்டிய இடத்தில், பரங்கியருக்குப் பல்லக்குத் தூக்கிய சிற்றரசர் கூட்டத்தைச் சேர்ந்த இராமநாதபுரம் ராஜா அல்லவா வீற்றிருக்கிருர்! வெட்கங்கெட்ட நிலைக்கு, வேறென்ன எடுத்துக்காட்டு வேண்டும்.

தமிழ்நாடு என்ற பெயர் வேண்டும்.

ஏழைகள் ஈடேற்றப்படுவதற்கான திட்டம் வேண்டும்.

ஆட்சியாளர்கள் இதைச் செய்கிற வரையில் உண்ணுவிரதமிருக்கிறேன், என்று சங்கரலிங்க நாடார் எனும் காங்கிரஸ் தியாகி, அல்லற்படுகிருர்; அமைச்சர் அவையில் அமர்ந்துகொண்டு, என்ன ரகளை? என்ன கூச்சல்? என்று கேட்டிட, இராமசாமி படையாச்சியும் மாணிக்கவேலரும் இருக்கிருர்கள், இது வேதனையைக் கிளறவில்லை, வெட்கத்தை மூட்டவில்லை, இந்த அமைச்சருக்கு; நாம் ஒரு காலத்திலே ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்தோமாம், ஆகவே நம்மை மக்கள் ஆதரிக்கக் கூடாதாம்!!

யாரார் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் என்று மக்களால் சுட்டிக் காட்டப்பட முடியுமோ, அவர்களிலே பசைகொண்டோரிடமெல்லாம் நேசம் கொண்டு சுவைத்து, இன்புறுவதுதான் இன்றைய காங்கிரஸ் என்பதை யார்தான் அறிந்து கொள்ளவில்லை! ஊர் முழுவதையுமா ஒரு அமைச்சர் தமது அதி

(15-ம் பக்கம் பார்க்க)

# தணலில் தங்கம்

மா. கி. தசரதன்

"போய் வருகிறேன் அம்மா. எல்லாம் நினைவில் வைத்துக்கொள். புத்திசாலிப் பெண் நீ. கணவன் மனம்போல் நடந்துகொள். பெரியவர்கள் சொற்களை மதித்து ஒழுகு" என்று சொல்லிய வண்ணம் அப்பா தெருவாயிற்படியைக் கடந்துவிட்டார். பிரிகின்ற வேதனை அவர் முகத்தில் நன்றாகத் தெரிந்தது, நான் அறியக்கூடாது என்று எனக்குத் தெரியாமல் மேல் துண்டால் முகம் துடைப்பதுபோல் கண்களின் ஓரத்தைத் துடைத்துக்கொண்டார். தெருவில் நின்று "போய் வருகிறேன் அம்மா" என்று மீண்டும் ஒருமுறை சொன்னார். கணவனும் உடன் சென்றார் அவரை வண்டி ஏற்றிவிட்டு வர.

அப்பாவின் உருவம் தெரியும் வரை தெருவிலேயே நின்றுகொண்டிருந்தேன். தயங்கித் தயங்கிப் பிறகு உள்ளே சென்றேன். ஆனால் என் மனம் மட்டும் அப்பாவுடனேயே போய்க்கொண்டிருந்தது.

அவர் பரந்த உலகில் எல்லோருடனும் பழகியவர், அதனால் பிரிகின்றபோது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எளிதாகப் போய்விட்டார். அவரால் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியும். ஆனால் அம்மாவை நினைத்தால்தான் எனக்கே கண்களில் பனி படர்கின்றது.



"தங்கம்" "தங்கம்" என்று நொடிக்கொருமுறை அழைத்து 'அதைச் செய்' 'இதைப் பழகிக்கொள்' என்றே சொல்லிக்கொண்டிருப்பாள். என் செயல்களில் சொற்களில் குற்றம் கண்டால் "நாளை போகிற இடத்தில் இப்படியா இருப்பது?" என்று என்னை வெளியில் அனுப்புவதைப் பற்றியே பேசிக்கொண்டு இருந்தாள். ஆனால் நான் வெளியார் வீட்டிற்குப் புறப்படும் நாள் வந்ததும் விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டாள். காண்பன எல்லாம் என்னையே நினைவூட்டும் அவளுக்கு. உண்ணும் போதும் என் நினைவாகவே இருப்பாள். முன்பொரு முறை திருப்பெரும்புதூரில் தேர்த் திருவிழா காண வேண்டும் என்று நான் போயிருந்தபோது, வீட்டில் மோர்க்களி செய்தாளாம். அந்த மோர்க்களி தின்று தீருகின்ற வரை "தங்கம் இருந்தால் சாப்பிடுவாள், தங்கத்திற்கு இது நிரம்பப் பிடிக்கும்" என்றே சொல்லிக்கொண்டு இருந்தாளாம். நான் திரும்பி வந்ததும் அப்பா சொல்லிச் சொல்லி கேலி செய்து கொண்டே இருந்தார். அம்மாவுக்கு என்மீது கொள்ளை ஆசை. நான் நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டு நன்றாக வாழ்ந்து சீரும் சிறப்பும் பெறவேண்டும் என்பது அவளது வாழ்வின் குறிக்கோள் என்றே சொல்லலாம்.

நான் கணவன் வீட்டிற்குப் புறப்படும் அன்று காலில் வீழ்ந்து வணங்கி 'வருகிறேன்மா" என்று சொல்ல நினைத்து வாயைத் திறந்தேன். உதடுகள் அசைந்தனவே ஒழிய குரலில் இருந்து சொற்கள் வெளிப்படவில்லை. எனவே தலையை மட்டும் ஆட்டினேன். உடனே அவள் கண்கள் தாரை தாரையாகக் கண்ணீர் சிந்தத் தொடங்கிவிட்டன. எனக்கும் அப்போது கண்ணீரை அடக்க இயலாது போயிற்று.

என்ன செய்வது? நாற்றங்காலில் நாற்றுச் செழுமையாக அடர்ந்து வளர்ந்து வருகின்றது. பருவம் வந்ததும் உழவன் நாற்றுக்களை எல்லாம் வயலில் கொண்டுபோய் நட்டுவிடுகின்றான். பெண்கள் வாழ்க்கையும் அதுபோல்தான் இருக்கின்றது. மணம் முடிகின்ற வரை தாய் வீடு என்ற நாற்றங்காலில் செழுமையாய்ச் செல்வமாய் வளர்த்து விடுகின்றார்கள். பருவமானதும் அங்கிருந்து களைந்து கணவன் இல்லம் என்ற வயலில் கொண்டுபோய் நட்டுவிடுகின்றார்கள். ஒரு சில வயல்கள் நாற்றங்காலைவிட நன்முறையில் பயிர்கள் வளர வசதியும் வாய்ப்பும் தந்து துணை நிற்கின்றன. பலவிடங்களில் நாற்றங்கால் வாழ்க்கைக்கும் வயல் வாழ்க்கைக்கும் தொடர்பே இல்லாமல், வளமும் கொழிக்காமல் துவண்டு வாடிவிடுகின்ற நிலை வாய்க்கின்றது.

என் வாழ்க்கை எப்படிக் கழியுமோ என்ற ஐயம் எனக்கு வேதனையைத் தருகின்றது. நான் வளர்ந்த இடத்தில் செல்வமாய் வளர்ந்தேன். வாழும் இடத்தில் சீர்பட்டு சிறப்புறுவேனா, சீரழிந்து சிதைந்து போவேனா என்பதே தெரிய



வில்லை, என்று ஏதேதோ எண்ணியபடியே கணவன் வரும் வரை இருந்துவிட்டேன்.

கொஞ்ச நாள் பழக்கந்தான், என்றாலும் என் மனம் அவரைப் பற்றி எண்ணுகின்றபோது இன்பமடைகின்றது.

அப்பா ஊருக்குப் போகிறேன் என்றபோது இன்னும் இரண்டு நாட்கள் இருந்துதான் போகவேண்டும் என்று அவரை அன்புடன் வற்புறுத்தி இருக்கச் செய்தார். ஊருக்குப்போன அன்றும் நெடுந்தொலைவு உள்ள இரயில் நிலையம் வரை சென்று நீண்ட நேரம் காத்திருந்து அவரை இரயில் ஏற்றிவிட்டு வந்தார், அவர்.

என்னிடத்திலும் அன்பாகத்தான் நடந்து கொண்டார். இரயிலடியிலிருந்து திரும்புகிற போது கைநிறைய மலர் வாங்கி வந்தார். கூச்சமோ என்னமோ என் கையில் அதைத் தாராமல் அருகில் இருந்த பெட்டியின் மீது வைத்துவிட்டுப் போனார். என் கூந்தலில் அவர் சூடவில்லை என்றாலும் கையிலாவது தருவார் என்றுதான் எண்ணினேன். ஆனால் ஏனோ பெட்டி மீது வைத்ததும்தான் எனக்கும் கொஞ்சம் வருத்தம். என்ன செய்வது? பெரியவர்கள் இருக்கும் வீட்டில் யார் என்ன சொல்வார்களோ என்ற அச்சமாக இருக்கலாம்; அல்லது அடுத்த அறையின் வாயிற்படியில் நின்றிருந்த அவர் அண்ணியாரிடமிருந்து, 'கரிசனையைப் பார்' என்று கிண்டல்மொழி பிறக்கப்போகிறதே என்ற வெட்கமாக இருக்கலாம்.

பெரியவர்கள் இருக்கும் வீடு என்று சொன்னாலும் இருக்கிற பெரியவர்கள் வேறு யாரும் அல்ல. அவருடைய அப்பா நெடு நாட்களுக்கு முன்னமே இயற்கை எய்திவிட்டாராம். அம்மா சென்ற ஆண்டு இறந்துவிட்டார்களாம். இப்போது குடும்பத்தில் பெரியவர் இவருடைய அண்ணன்தான். பெண்களில் பெரியவள் அண்ணி. அவர்கள் எப்படிப்பட்டவர்களோ என்ற ஐயம் என் மனதில் ஊசலாடுகின்றது.

அவருடைய அண்ணன் சாந்தம் நிலவும் முகத்துடன் அமைதியாக விளங்குகின்றார். அந்தத் தோற்றம் சோகம் என்றுங்கூடச் சொல்லத் தக்கவாறு விளங்கும். எனக்கு என்னமோ சாந்தமே மிகுதியாக இருப்பதுபோல் தோன்றுகின்றது.

என் கணவரின் அண்ணி-நல்ல எழிலுடன் காணப்படுகின்றார். சொல்வதில் வெட்கம் என்ன. நான் இளமையில் மிக்க அழகி என்ற செருக்குடன் வளர்ந்தவள் தான். பள்ளிக்கூடம் செல்லும் என் வயதுப் பெண்களில் எனக்குத்தான் நீண்ட கூந்தலும், அதில் நெளிந்த வளைவுகளும் உண்டு. எங்கள் பள்ளி நாடகங்களில் அழகான பெண் வேடம் என்றால் எனக்கே அதை ஒதுக்கிவிடுவார்கள். நான் அவ்வளவு அழகு என்று சொல்லலாம். ஆனால் என் ஓரகத்தியுடன் ஒப்பிடுகின்றபோது என் அழகு ஒரு பொருட்டாகாது.

திருமணம் ஆகிப் பல ஆண்டுகள் ஆன பின்னரும் இளமையின் எழில் தோற்றம் காட்டும் முகப் பொலிவுடன் பூரிப்பான உறுப்பு நலன்கள் பெற்றவள் அவள்.

தன்னை ஒப்பனை செய்துகொள்வதிலும் நெடு நேரம் செலவிட்டுச் செயற்கை அழகையும் உடன் கூட்டிக்கொள்ளுகின்றாள். அவள் பக்கத்தில் நான் நின்றால் என் அழகு எடுபடுவதே இல்லை.

அவளைப்பற்றி அப்போதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. என்னிடம் சில சொற்களே பேசுவாள். அவையும் தேவையை ஒட்டியவையாகத்தான் இருக்கும். என்னிடம்தான் இப்படி இருக்கிறாளே ஒழிய, மற்றநேரங்களில் கலகலப்பாகப் பேசியும் சிரித்தும் மகிழும் பழக்கம் இருக்கின்றது. புதியவள், பழக்கமற்றவள் என்று எண்ணி இருக்கலாம் அல்லது நான் அவளுக்குக் கீழ்ப்படிந்தவள் என்ற எண்ணமாகவும் இருக்கலாம்.

வேறு யாரும் இல்லை அந்த வீட்டில். கணவனுடைய அண்ணனுக்குத் திருமணம் ஆகிப் பல ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இன்னும் அந்த வீட்டில் குழந்தைக் குரலே கேட்கவில்லை. ஓரகத்தியோ அவள் கணவனோ அதைப்பற்றிக் கவலை கொள்பவர்களாகவே தெரியவில்லை.

என்னால் அப்படி இருக்க முடியுமா என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. சிறு குழந்தைகள் என்றாலே எனக்கு ஆசை அதிகம். கையும் காலும் தளதள என்று பஞ்சுபோல் இருக்கும் உடலைத் தொடும்போது உண்டாகும் தண்மை உணர்ச்சி எனக்கு மிகவும் பிடிக்கும். குழந்தைகளின் கைகள் இரண்டையும் எடுத்து என் கண்களில் ஒத்தடம் கொடுப்பதுபோல் அழுத்திக்கொள்வேன். வெயிலின் வெப்பத்தால் எரியும் கண்கள் பன்னீர் பட்டதும் குளிர்ச்சியடைவதைப் போன்ற இனிமை அப்போது ஏற்படும்.

என் வயிற்றில் ஒரு குழவி பிறக்க வேண்டும். அதைப் பாராட்டிச் சீராட்டி வளர்க்கவேண்டும் என்பது என் ஆசை.

ஓரகத்திக்கு இந்த ஆசை இருப்பதாகவே தெரியவில்லை. ஒருவேளை உள்ளத்து உணர்ச்சிகளை பிறர் அறியா வண்ணம் மூடி மறைப்பதில் வல்லவளோ?

யார் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டுமே. என் கணவன் என் மீது என்றும் அன்பு கொண்டிருந்தால் போதும். அவர் தேவை அறிந்து வேண்டிய பணியைக் குறைவின்றிச் செய்து, வீட்டுக் கடமைகளைச் செம்மையாக முடித்தால் போதும், அமைதியாக வாழலாம் என்று நினைத்திருந்த நான் நேற்று முதல் பெரிய ஏமாற்றத்திற்கு உள்ளாகி வருகிறேன். என்ன செய்வது என்றே தெரியவில்லை.

திருமணம் ஆனதும் கணவனும் நானும் எங்கள் வீட்டிலேயே மூன்று வாரங்கள் கழித்தோம். அப்போதெல்லாம் நான் வானத்து வீதியில் காற்று வெளியில் சிறகடித்துப் பறக்கும் பச்சைப் பசுங்கிளிபோல் இன்பத்தின் எல்லையையே எட்டிவிட்டேன் என்று சொல்லலாம்.

மணவறையில் ஆண்மைமிக்க தன் விரல்களால் என் கையைப் பற்றிய போதும், அவர் கழுத்து மாலை ஒன்றை என் கழுத்தில் எடுத்து இட்டபோதும், என்மனம்

உற்ற மகிழ்ச்சிக்கும் உடலில் பரவிய உணர்ச்சிக்கும் எல்லையில்லை என்று நினைத்திருந்தேன்.

ஆனால் எங்கள் வீட்டில் நான் பெண்மை இன்பம் பெற்றபோது என் மனம் கட்டிலடங்காத வானம்பாடியாக இருந்தது. வாழ்க்கையில் இது நாள்வரை கண்டறியாத சுவை ஆண்மையின் முதலில் கொஞ்சம் தயக்கமும் அச்சமும் இருந்தது. பிறகு ஆற்றல் மிக்க அவர் அரவணைப்பின் அன்பிற்கு அடங்கிச் செயலற்றுப் போகின்ற அளவிற்கு இன்பக்கடலில் மூழ்கித் திளைத்தேன்.

அதற்குப் பிறகு அவர் எங்கள் வீட்டில் இருந்த நாட்களில் எல்லாம் அவருக்குத் தேவையானவற்றை நான்தான் செய்துவந்தேன். குளிக்க வெந்நீர் எடுத்து வைத்து அதில் அளவாகத் தண்ணீர் கலந்து இளஞ்சூட்டில் வைப்பேன். குளித்து வருமுன் மணை இட்டு அதன் முன் இலை இட்டு எதிர்பார்த்து நிற்பேன். இந்தப் பணிகளில் நான் ஒருவகை இன்பம் கண்டேன்.

மூன்று வாரங்களும் மூன்று நாட்களாகப் பறந்துவிட்டன என்று சொல்லலாம். "நாளை நாள் பார்த்திருக்கின்றார்கள் தங்கம். காலை சிற்றுண்டி முடித்து ஊருக்குப் புறப்பட வேண்டும்" என்று அவர் சொன்னபோது என் மனம் சொல்லவொண்ணா வேதனை அடைந்தது. புதுஊர், புதுமனிதர்கள் எப்படி அமையுமோ என்று மனம் கலங்கிக்கொண்டே இருந்தது. ஆனால் கணவன் உடன் இருக்கின்றாரே என்று எண்ணி மன ஆறுதல் பெற்றேன். அதனால் தான் 'போய்வருகிறேன்' என்று அம்மாவிடம் சொல்ல இயலாது தலையசைத்தபோது பெருகிவந்த கண்ணீரையும் அடக்கிக்கொள்ள இயன்றது.

யாருடைய பணிகளைச் செய்வதில் நான் இன்பம் கண்டேனோ, அப்பணிகள் எனக்கு மறுக்கப்பட்டு வருகின்றன. எவர் என்னவர் எனக் கருதி வந்தேனோ, அவர் எனக்கு எட்டாத நெடுந்தொலைவில் போய்விட்டாரோ என்று அஞ்சுகிறேன்.

ஓரகத்தி என்னுடன் சரியாகப் பேசாததின் உண்மைக் காரணம் இன்னும் எனக்குப் புலப்படவில்லை. ஆனால் என்னிடம் அவள் பகையாக இருக்கின்றாள் என்பது மட்டும் மெல்லத் தெரியத் தலைப்படுகின்றது.

நான் அவளுக்கு என்ன பிழை இழைத்தேன். சிலரைக் கண்டால் நம்மையும் அறியாமல் காரணமின்றி அன்பு காட்டுவதும் வேறு சிலரைக் கண்டால் வெறுப்புக் காட்டுவதும் மன இயல்பன்றோ. அவ்வகையில் அவளுக்கு என்னைக் கண்டாலே வெறுப்பு உண்டாகிறதோ. என்தோற்றம் கண்டாலே பகைமை காட்டக்கூடியது அன்றே! ஏனோ என்னைக் காணும் பார்வையில் கனிவு தோன்றுவதற்கு மாறாகக் கடுப்புப் புலப்படுகின்றது!

உற்றாரையும் பெற்றோரையும் விட்டு வந்திருக்கும் நான், என்னிலும் மூத்தவள் என்ற முறையில் அவளிடத்தில் அன்பையும் ஆதரவையும் எதிர்பார்த்தேன். ஆனால் எனக்குப் பகையும் எதிர்ப்புமே அவள் தரும் பரிசாக இருக்கின்றது.

'போய்வருகின்றேன் மா' என்சொல்லிச் சென்ற அப்பாவை அவர் இரயிலடிவரை சென்று வழிகூட்டிவிட்டு வரும்போது வாங்கிவந்த மலரைப் பெட்டியின் மீது வைத்துவிட்டு வாசல் தொட்டியில் இருந்த தண்ணீர் மொண்டு, முகம் கழுவிக்கொண்டு அலுப்பாக உட்கார்ந்தார்.

"கலம் எடுத்துவை சாப்பிட வேண்டும்" என்று அவர் பெயர் கூறாமல் பொதுவாகச் சொல்லிவிட்டுப் பனை ஓலை விசிறியை எடுத்து மெல்லவிசிறிக்கொண்டிருந்தார். நான் அறையைவிட்டு வெளி வந்தேன். இதற்குள் என் ஓரகத்தி கலம் எடுத்துக் கழுவிவைத்து உணவையும் படைக்கத் தொடங்கிவிட்டாள். இடையிடை வந்த என்னையும் தடுத்துவிட்டுத்தானே அவர் உண்ணுகின்றவரை உடனிருந்து உதவி செய்தாள்.

உண்ட பிறகாவது சிறிதுநேரம் பேசலாம் என நான் எண்ணி இருந்தபோது என் எண்ணத்தில் பிடி மண் அள்ளிப் போட்டுவிட்டு "அறுவடை ஆட்கள் இன்னும் வந்திருக்க மாட்டார்கள். அதை வேறே போய்பார்க்கவேண்டும்" என்று சொல்லியவண்ணம் வாயிற்படியைக் கடந்துவிட்டார்

குளத்துமீனை எடுத்துத் தரையில் போட்டால் அது தவிக்கும் தவிப்பை நான் இங்கு வந்தது முதல் அநுபவித்து வருகின்றேன். என்மீது அன்பு பொழியும் அன்னையையும் அப்பாவையும் விட்டு இங்கு பழகாத புதுமனிதர்களுடன் வாழும் வாழ்க்கை எனக்கு ஒரு தனிமை உணர்ச்சியை ஊட்டுகின்றது. என் கணவருடனும் இங்குவந்ததுமுதல் நெருங்கிப் பழகவே வாய்ப்பில்லை. ஓரகத்தியோ பகை காட்டுகின்றாள். தொடக்கமே இப்படி மனம் துவளும் நிகழ்ச்சிகளை உடையதானால் இன்னும் போகப் போக........

கணவன் வெளியில் போனதும் ஓரகத்தி 'சாப்பிடவாயேன்' என்று விடுத்த அழைப்பே வெறுப்பூட்டுவதாய் இருந்தது. நான் இருந்த மன நிலையில் எனக்கு உணவே வேண்டி இருக்கவில்லை. வேண்டாம் என்றால் அது விபரீதமாகப் போகுமே என அஞ்சிக் கலத்தின் முன் அமர்ந்தேன்.

உண்டு முடிந்ததும் வீட்டு வேலைகளை எல்லாம் செய்துமுடித்தேன். என் கணவனுக்கு உணவு படைக்கப் போனபோது என்னைத்தடுத்த ஓரகத்தி இப்போது வாளா இருந்துவிட்டாள். உண்டதும் தலைசீவிச் சிங்காரம் செய்துகொண்டு நெற்றியில் திலகம் இட்டுக்கொண்டு, "வீட்டைப் பத்திரமாகப் பார்த்துக்கொள், வருகிறேன்" என்று சொல்லியவண்ணம் என் பதிலையும் எதிர்நோக்காது வெளியில் போய்விட்டாள்.

அக்டோபர் முதல் எங்கும் கிடைக்கும்!

'தென்றல்'

ஆசிரியர்: கண்ணதாசன்

சற்று நின்று வரும் தென்றல்
இனி என்றும் வரும்!

ஏஜண்டுத் தோழர்கள் புதுப்பித்துத் தொடர்புகொள்க.

தென்றல், :: சென்னை-6.

தன்னந்தனியளாக அவ்வீட்டில் என்ன செய்வது என்றே எனக்குப் புலப்படவில்லை. குழந்தையும் இல்லாத வீடு அது. பொருள்கள் எல்லாம் வைத்தது வைத்த இடத்தில் அசையாமல் இருந்தன. தூசும் தும்பும் மிகுதியாக இருந்தாலாவது வேலை இருக்குமே என்று எண்ணி வீட்டுக் கூரையைப் பார்த்தேன். கீழே எல்லோர் கண்களிலும் படும் இடம் இருந்த தூய்மையில் கால்பங்கு கூட மேல காணப்படவில்லை. ஒரே ஒட்டடையாகத் தூய்மை கெட்டுக் காணப்பட்டது. உலகமே இப்படித்தானே இருக்கின்றது. பிறர் அறிய ஆடம்பரமும், ஒழுக்கமும் காட்டினாலும் உள்ளே ஒட்டைகள் தானே மிகுதியாகக் காணப்படுகின்றன. உலகத்திற்கு போவானேன், என் ஓரகத்தியே போதுமே. அவள் மேனியிலே மின்னும் அழகு உள்ளத்திலே காணப்படவில்லையே. சே! என்ன இது! என்னிடத்தில் அவள் வெறுப்புக்காட்டினால் அதற்காக அவளை அப்படியே முடிவு கட்டிவிடலாமா? ஒருவேளை அவளுக்கு என்னைப் பிடிக்காமல் இருக்கலாம். அதனால் என்னிடம் பகை காட்டுகின்றாளோ என்னவோ!

அவள் வருகின்ற வரை பொழுதாவது கழியட்டுமே என எண்ணி ஒட்டடைக் கோலைத் தேடிச் சென்றேன்; அந்த வீட்டில் அதுகாணப்படவே இல்லை. சரி நாளை ஒட்டடைக் கோல் ஏற்பாடு செய்து கொண்டு பிறகு இந்த வேலையைக் கவனிக்கலாம் என்று கூடத்திற்கு வந்தேன்.

வெளியூர் போயிருந்த கணவனின் அண்ணன் அப்போது தான் வந்தார். "உணவு படைக்கட்டுமா?" என்று கேட்டேன்.

"வேண்டாம்மா வழியிலேயே முடித்துக்கொண்டேன்" என்றார். சட்டையைக் கழற்றி மாட்டிவிட்டு கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாம்மா என்றார். கொணர்ந்து கொடுத்த நீரை அருந்தியவாறே,

"சொக்கப்பன் எங்கே?" என்றார்.

"அறுவடை ஆட்களைப் பார்க்கப் போனார்" என்றேன்.

"அவள்-உன் ஓரகத்தி எங்கே?" என்றார்.

"வெளியே போனார்கள், எங்கே என்று சொல்லவில்லை" என்று சொன்னதும் அவர் விட்ட பெருமூச்சையும் முகத்தில் தோன்றிய உணர்வையும் என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை. அமைதி நிறைந்தது என்று நான் எண்ணிய முகத்தில் இப்போது சோகம் படர்ந்ததாக நினைத்தேன். சரியாக பார்க்கலாம் என மீண்டும் தலை நிமிர்ந்தபோது அவர் வேறு புறமாகத் திரும்பிவிட்டார். அதனால் அவர் முகத்தில் நிலவியது சோகம் தான் என என்னால் உறுதி செய்ய இயலாமற் போய்விட்டது.

மாலை விளக்கு வைப்பதற்கு முன்னர் ஓரகத்தி இல்லம் திரும்பினாள், நெடுந் தொலைவு நடந்து வந்த களைப்பு அவள் முகத்தில் காணப்பட்டாலும், அதில் மகிழ்ச்சி இழைகள் கலந்து இருந்தன. இதுவரை அவள் எங்கே போயிருந்தாள், எதற்காகப் போனாள் என்பது ஒன்றையுமே அம்பலவாணர்-ஓரகத்தியின் கணவர்—கேட்க வில்லை. இதுவரை அவள் வீட்டில் இல்லாததைப்பற்றிக் கவலைப் பட்டவராகவே காட்டிக்கொள்ள வில்லை. இந்த நிலையைக் கண்ட எனக்குப் பெருவியப்பு மேலிட்டது. மனைவிக்கு அஞ்சி அடங்கும் கணவராக அவரை நான் நினைத்ததில்லை. உரிமை கொடுத்துப் பழகுகின்றாரோ என்று எண்ணவும் இயலவில்லை. பிற்பகல் மனைவி வீட்டில் இல்லாதபோது நெடுமூச்சுவிட்டு நினைப்பில் மூழ்கினார். மனைவியை நேரில் கண்டபோது அதைப்பற்றி ஒன்றுமே கேட்கவில்லை. விசித்திரமான குடும்பந் தான் இது!

இரவு விளக்கு ஏற்றியான பின் என் கணவர் வீடு திரும்பினார். அண்ணனும் தம்பியும் சில சொற்களை பேசினர்.

"அறுவடை எதுவரை ஆயிற்று?"

"ஓடையில் இன்னும் கொஞ்சம் பாக்கி"

"தலைஏட்டுக் கழனிகள்......?"

"அவை இன்னும் பதப்படவில்லையாம்"

"ஏன் நீ பார்க்கவில்லையா?"

"........"

"ஆட்கள் எத்தனை பேர்"

"இருபத்து ஏழு பேர்"

"நாளை வருகிறார்களா?"

"வருவார்கள்" என்ற அளவில் அவர்கள் உரையாடல் முற்றுப் பெற்றது.

களத்துமேட்டில் கதிர்க் கட்டு களைப் போட்டு வைத்திருப்பதாகவும், அதற்கு ஒருவர் காவல் போக வேண்டும் என்றும் பேசிக்கொண்டதைக் கேட்டதும் என் மனம் துணுக்குற்றது, எங்கே கணவர் மீண்டும் அந்த வேலைக்குப் போய் விடுகிறாரோ என்று எண்ணி.

"நான் போகிறேன் அங்கே; நீ வேண்டாம்" என்று அம்பலவாணர் கூறியதும், ஓரகத்தி,

"நீங்கள் தான் வெளியூர் எல்லாம் போய் அலைந்துவிட்டு வந்தீர்களே கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளுவது தானே. அவர் போனால் நல்லதுதானே. நானில்லையா தங்கத்துக்குத் துணை" என மூச்சும் விடாது எதிர்ப் பேச்சுக்கும் இடம் தராது பேசித் தீர்த்தாள்.

முன்னமே குழம்பியிருந்த என் மனம் இதைக் கேட்டு மீண்டும்

## கேளுங்கள்

*

டில்லியின் அநீதிக்கு இதோ ஒரு எடுத்துக் காட்டு.

கல்லூரிகளில் படிக்கவும், வெளிநாட்டுப் படிப்புக்குச் செல்லவும், டில்லி, உபகாரச் சம்பளம் தருகிறதல்லவா?

இந்த உபகார சம்பளத்தைப் பெற சென்னையைச் சேர்ந்த மாணவர்கள் 60 மார்க்குகள் வாங்க வேண்டுமாம்!!

ஆனால், இந்தியாவின் வேறு மாகாணத்திலிருப்பவர்கள் 50 அல்லது 55 மார்க்குகள் வாங்கினால் போதுமாம்!! எப்படி நியாயம்?

கலங்கியது. கணவன் எட்டாக் கனியாகி விடுவாரோ என்றும்கூட நினைத்துவிட்டேன்.

ஆனால் அம்பலவாணர்,

"அவன் இருக்கட்டும், இன்று நான் போகிறேன். நேரில் பார்த்தது போலும் இருக்கும்'' என்று தீர்மானமாகச் சொன்ன பிறகு அதற்கு மறு மொழி பிறக்க வழி இல்லாது போயிற்று. இதைக் கேட்டதும் ஓரகத்தியின் முகம் குன்றியது அச் சிறு விளக்கொளியிலும் நன்றாகக் காண முடிந்தது. அன்று இரவு அவள் வேலை செய்தபோதெல்லாம் சாமான்கள் பெருந் தொல்லைப்பட்டன. முகத்தின் கடுப்பு மாறாமலே இருந்தது.

இரவு மணி ஆகிக்கொண்டே இருந்தது. கணவனோ அறைக்குச் சென்று படுத்துவிட்டார். எனக்கோ ஓரகத்தியிடம் உட்கார்ந்திருக்கவே பிடிக்கவில்லை. அவள் ஏதாவது பேசினாலும் வெறுப்பை உள்ளடக்கி 'ஊம்' கூட்டிக்கொண்டிருந்திருப்பேன். ஆனால் அவளோ மோன நிலையில் இருந்தாள். அவளாக "போய்ப் படுத்துக்கொள்'' எனச் சொல்லி அனுப்புவாள் எனக் காத்திருந்து அலுத்து விட்டது. நானாகப் போவதற்கும் வெட்கம் முன் வந்து நின்று தடுத்தது. என்ன செய்வது எனத் தெரியாது நான் குழம்பிக்கொண்டிருந்த போது, கல்ல வேளையாக ஓரகத்தியே வாய்திறந்து பேசினாள். "குடிக்கச் செம்பில் தண்ணீர் எடுத்துக்கொண்டு போய்ப் படுத்துக் கொள்ளேன், ஏன் விழித்திருக்க வேண்டும்'' என்று சொன்னதும் நாணமும் ஆசையும் தடுக்கவும் தள்ளவுமாக எப்படியோ அவர் இருந்த அறைக்குள் சென்று சேர்ந்தேன்.

அவர் எழுந்து வந்து கதவின் உள் தாளை இட்டார்.

என் உடல் எல்லாம் வியர்வை ஆறாக ஓடியது. முன்தானையால் துடைக்கத் துடைக்க முகத்தில் வெள்ளம் பெருகியபடியே இருந்தது.

(தொடரும்)

# எகிப்திய செந்நீர் பிரிட்டனுக்குப் பன்னீர்!!

உலகத்திலே பெரிய கால்வாய் சூயஸ். இக்கால்வாய் வெட்டுவதில் உண்டான கஷ்டம்போல் வேறு எந்த வேலையிலும் இல்லை, இக்கால்வாயில் தொழிலாளர்கள் மடிந்ததுபோல் வேறு எந்த வேலையிலும் ஆட்கள் மடிந்ததில்லை. வேலை நடைபெற்ற பத்து வருடத்திற்குள் ஒரு லட்சம் தொழிலாளர்கள் மடிந்தனர். இவ்விதம் மடிந்தவர்களிலே சமபாதிப் பேர் எகிப்தியர். இதரர்கள் ஆப்பிரிக்கா ஆசியா நாட்டைச் சேர்ந்தவர்கள்; ஒரு சில ஐரோப்பியர்களும் மடிந்திருக்கின்றனர். ஆனால் பிரிட்டிஷாரைப்பொறுத்தவரையில், இவர்களில் ஒருவருக்குக்கூட சூயஸ் கால்வாய் சம்பந்தமாக சிறு காயமும் ஏற்பட்டதில்லை. ரொக்கமோ அதுவரையில் ஒரு செப்புக்காசு கூட செலவிடவில்லை.

சூயஸ் கால்வாய் வெட்டுவதற்காக உரிமை, உழைப்பு இவ்விரண்டையும் அர்ப்பணம் செய்த நாடு எகிப்து. இடத்தையும் கொடுத்தது, காரியத்துக்கு பணத்தையும் கொடுத்தது, உழைப்பதற்கு ஆட்களையும் கொடுத்தது. ஒவ்வொரு அடி நிலத்துக்கும் ஒவ்வொருவர் பலி என்பதாகப் பேச்சளவில் பேசினாலும் செயலளவில் காணுவது கடினமே. என்றாலும் சூயஸ் கால்வாய் வெட்டுவதற்காக இந்த எகிப்தியர்களை கணக்கெடுத்துப் பார்ப்போமானால், ஒவ்வொரு அடி நிலத்துக்கும் ஒவ்வொரு எகிப்தியர் விகிதம் பலியாகியிருக்கின்றனர். ஏறக்குறைய 100 மைல் தூரமுள்ள கால்வாய் வெட்ட 50000 எகிப்தியர் பலியாகியிருந்தால், ஒரு அடி நிலத்திற்கு பலியானோர் எத்தனை பேர் என்பதை வாசகர்களே தீர்மானித்துக்கொள்ளலாம். மடிந்த எகிப்தியர்களைத் தவிர்த்து, இன்னும் மடிந்த இதர ஆப்ரிக்க ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்கள் 50000 பேர் என்பது இவண் குறிப்பிடத்தக்கது. மொத்தம் கணக்கு எடுத்துப் பார்த்தால், இன்று பிரிட்டன் உரிமை கொண்டாடும் இந்தசூயஸ் கால்வாயை வெட்டுவதற்காக ஒவ்வொரு அடி நிலத்திற்கும் இருவர் வீதம் ஆப்ரிக்க ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்கள் பலியாகியிருக்கின்றனர் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

பிரிட்டிஷார் சூயஸ் கால்வாய் வேலை நடந்துகொண்டிருக்கும் போதே பேரம்பேசிக்கொண்டிருந்தனர், சூயஸ் கால்வாயுடன் இவர்களின் பேரம் நின்றிருக்குமானால் நிலைமை இவ்வளவு தூரம் மோசமாகியிருக்காது. அரசியலிலும் தலையிட ஆரம்பித்தனர். எகிப்து மன்னரைப் பொம்மை போன்று ஆட்டிவைத்து வீண் செலவுகளை விர்த்திசெய்து கடைசியில் கடனாளியாக்கி, கடனுக்குப் பதிலாக எகிப்து மன்னர்வசமிருந்த சூயஸ் கால்வாய் பங்குகளையெல்லாம் பறித்துவிட்டனர். இவ்விதமாக பிரிட்டன் தந்திரமாகவும், சாமர்த்தியமாகவும் சூயஸ் கால்வாயின் பங்குகளையெல்லாம் பறிப்பதில் ஈடுபட்டிருந்தது. கால்வாயின் வேலை எப்படியோ ஒருவாறு முடிந்துவிட்டது. இதற்காக செலவழிந்த தொகை மொத்தம் 432,807,882 பிராங்க். ஆனால் ஆரம்பத்திட்டம் இதில் பாதியே என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

சூயஸ்கால்வாய் திறப்புவிழாவை வெகு விமரிசையாகக்கொண்டாட தடபுடலான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பல நாடுகளைச் சேர்ந்த 100 பிரதிநிதிகளுக்குமேல் இவ்வைபவத்தில் பிரசன்னமாயிருந்தனர். கால்வாயைத் திறந்துவைப்பது யார் என்பதில் பலத்த தர்க்க வாதங்கள் ஏற்பட்டன. கடைசியாக ஓர் மகாராணியை ஏகமனதாக தேர்ந்தெடுத்தனர். இந்த மகாராணியை வரவேற்பதற்கென,

அதுவரையில் எவருக்குமே அளிக்காத முறையில், மிகக் கௌரவமான அந்தஸ்தில் அழைக்க ஏற்பாடு செய்தனர்.

சையத்பாஷா கூடுமான வரையில் வேலையாட்களைச் சேர்த்துக் கொடுத்தார். என்ஜினியர் லெஸப்ஸ் தைரியமாக முன்னின்று வேலை நடத்தினர். 25,000 தொழிலாளர்கள் ஒரு லட்சத்திற்கு மேல் உயர்த்தப்பட்டது. மேலும் புதிய யந்திரங்கள் தருவிக்கப்பட்டு சுறுசுறுப்பாக வேலை நடைபெற்றாலும் இறப்போரின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வந்தது, மாதம் மூன்று முடிவதற்குள் வேலையாட்கள் 5,000க்கு மேல் இறந்துவிட்டனர். இறுதியில் இந்த கொள்ளை நோய்க்குகாரணம் என்ன என்பதில் ஆராய்ச்சி செலுத்தினர். இதற்கென நூற்றுக் கணக்கான டாக்டர்கள் தருவிக்கப்பட்டனர்; பலரும் பல காரணங்கள் கூறினர். என்றாலும் இவ்வியாதிக்கு காரணம் தண்ணீர் தான் என்பதைக் கண்டுபிடித்தனர்.

சூயஸ் கால்வாய் வேலைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு சுத்த ஜலம் சப்ளைசெய்ய முயற்சி செய்தனர். எவ்வளவோ பிரயாசையுடன் தேடியும் சுற்றுப்புறங்களில் நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. கடைசியில் எகிப்தின் தலைநகரான கெய்ரோ அடுத்து சென்றால்தான் சுத்த ஜலம் கிடைக்குமென்பதை உணர்ந்தனர். எனினும் சூயஸ் கால்வாய்க்கும் சுத்த ஜலம் கிடைக்குமிடத்துக்கும் உள்ள தூரம் 150-மைல். இந்த 150-மைல்களும் கரடுமுரடான பாதைகள். எனவே சூயஸ் கால்வாய் வெட்டுவதில் உள்ளகஷ்டத்தைப் பார்க்கிலும் மேற்படி சுத்த ஜலத்தை இங்கு கொண்டுவருவதுதான் மிகுந்த கஷ்டமாக இருந்தது. ஆயினும் சையத்பாஷா இந்த நெருக்கடியைத் தீர்க்க ஓர் ஆலோசனை கொண்டு வந்தார். 150-மைல் தூரத்திலுள்ள சுத்த ஜலத்தை ஒட்டகங்கள் மூலம் கொண்டு வர வேண்டுமென்பதே அவர் கூறிய ஆலோசனை. அந்தநேரத்தில் இவரது ஆலோசனை என்ஜினியர் லெஸப்சுக்கு சமய சஞ்சீவிபோல் உதவியது.

இதனால் அரபிய நாடுகளின் ஒட்டகங்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டது. விலை உயர்வைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் சுமார் 2000 ஒட்டகங்களை கம்பெனியார் விலைகொடுத்து வாங்கினர். இந்த ஏற்பாட்டின் பேரில் சிறிது சாதகம் ஏற்பட்டது. ஆயினும் இந்த 150-மைல் தூரத்தைத் தாண்டுவதற்கு ஒட்டகங்களுக்கு ஏறக்குறைய 5-நாட்கள் பிடித்தது. எனவே பாதிக்குபாதி ஜலம் கிடைப்பதே கஷ்டமாக இருந்தது. இதுவும் தவிர அதிக நாட்கள் ஆவதின் காரணமாக ஜலம்கெட்டு விடுவதும் உண்டு. ஒட்டகத்துக்கு விலை 500லிருந்து 2000 பிராங்க் வரையிலும், ஜலப்பை ஒன்றுக்கு 50லிருந்து 100 பிராங்க்வரையிலும் இது சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு சம்பள வகையில் தினம் 10,000 பிராங்க்வரையிலும்ஏற்படும்செலவுகளெல்லாம் லெஸப்ஸின் ஆரம்பத் திட்டத்தில் இல்லாதவைகளாகும். அதாவது இவையெல்லாம் எதிர்பாராதசெலவுகளாதலால்,10வருட திட்டத்துக்கு ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த தொகை பூராவும் 5வருடம் வரையிலாவது வருமா என்பது சந்தேகமாகிவிட்டது.

எனவே சூயஸ் கால்வாய் வெட்டுவதைப் பார்க்கிலும், இங்கு வேலை செய்வோர்களுக்கு தண்ணீர் வசதி செய்வதில்தான் என்ஜினியர் கவனம் ஈர்க்கப்பட்டது. கடைசியாக சூயஸ் கால்வாய்க்கு ஓர் "குட்டிக் கால்வாய்" அதாவது தண்ணீர் பைப் பதிப்பதற்கு வெட்டப்பட்டது. கெய்ரோவை அடுத்த "திஸ்மா" ஏரியிலிருந்து சூயஸ் கால்வாய் வரையில் சுமார் 150 மைல் தூரம் இக் கால்வாய் வெட்டப்பட்டு தண்ணீர் சப்ளை செய்யப்பட்டது. இதன் பின்னர் ஜலக் கஷ்டம் குறைந்ததுடன், இறப்போரின் தொகையும் குறைந்தது. இதைத்தான் சூயஸ் கால்வாயின் முதல் வெற்றியெனக் கூற வேண்டும்.

கால்வாய் வெட்டும் வேலையாட்கள் சப்ளை செய்ய எகிப்து தேசமே பொறுப்பேற்றுக்கொண்டிருந்தாலும், பொறுப்பின்படி போதுமான வேலையாட்களை சப்ளை செய்ய முடியவில்லை. ஏனெனில் வேலை ஆரம்பித்து ஒரு வருடம் முடிவதற்குள் ஏறக்குறைய 50,000 எகிப்திய தொழிலாளர்கள் மடிந்துவிட்டனர். இதைத் தவிர்த்து மற்றும் இதர நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் 50,000 பேருக்கு மேல் மடிந்துவிட்டனர். எனவே இக் கால்வாய் வெட்டுவதற்கென ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்டிருந்த கூலியைப் பார்க்கிலும் பதின் மடங்கு கொடுப்பதாகக் கூறினாலும் ஆள் அகப்படுவது கடினமாகிவிட்டது. ஐரோப்பியர்களைப் பொறுத்த வரையில் ஆரம்பத்திலிருந்து கூலியாட்கள் சப்ளை செய்ய அறவே மறுத்துவிட்டனர். ஆனால் "அதிகாரிகள்" வேலையில் மட்டும் ஐரோப்பியர்கள் இதரருக்கு இடமில்லாது செய்துவிட்டனர்.

கால்வாய் வெட்டுவதில் அடிக்கடி ஏற்படும் மேற்படி இடையூறுகள் ஆங்கிலேயருக்கு வெகு சாதகமாக அமைந்துவிட்டது. இந்த ஸ்தாபனத்தில் பங்குதாரர்களாக சேர்ந்திருந்தவர்கள் 'கால்வாய் வெட்டமுடியும்" என்ற நம்பிக்கையை அடியோடு இழந்துவிட்டனர். "போட்ட முதலைத் திருப்பித் தந்தால் போதும்" என ஆரம்பத்தில் கோரியவர்களெல்லாம், இப்பொழுது "போட்ட முதலில் பேர்பாதி தந்தால் போதும்" என கூக்குரலிட ஆரம்பித்துவிட்டனர். ஸ்தாபனமோ நடைபெற்ற வேலைகளுக்கே பணம் பட்டுவாடாசெய்ய வகையில்லாது திண்டாடிக்கொண்டிருந்தது. பங்குதாரர்கள் வேறு நெருக்குகிறார்கள்! இந்த நிலையில் ஸ்தாபனம் என்ன செய்யமுடியும்?

இதுவரையில் நாடுபிடிப்பதிலும், பிடிபடாத நாடுகளில் இடையூறு செய்வதிலும், சூயஸ் கால்வாய் வேலையை அடியோடு ஸ்தம்பிக்கச் செய்வதிலேயுமே கண்ணுங் கருத்துமாக இருந்த ஆங்கிலேயர், சூயஸ் கால்வாய் ஸ்தாபனத்தின் அலங்கோல நிலையைக் கண்டதும் சதியாலோசனையில் இறங்கினர்.

[ "ரசிக ரஞ்சனி" பர்மா ]

★

# அந்த வரப்பிரசாதம்!

நிதி மந்திரி சுப்ரமணியம் சென்ற கிழமை, திருவண்ணுமலைக்குச் சென்று, பேசியபோது ஒரு மணிமொழி தந்தாராம், "ஈடுண்டோ எமது நேருவுக்கு? இரணடாவது ஐந்தாண்டுத் திட்டம் போதுமே, அவர் புகழைக் கூற! இதுபோல, ஒரு திட்டத்தைத் தீட்டித்தர இந்த தி.மு.க. வால் முடியுமோ?", என்பதாக.

நண்பருக்கு நேருவிடம் உள்ள பக்தி அதிகம்! அதனுல், கருத்தும் களங்கப்பட்டிருக்கிறது. சவால்விட்ட அவருக்கு, நாம் எடுத்துணர்த்த வேண்டும் — இல்லையெனில் எங்காவது, விபரமறிந்தோர் மத்தியில் போய் இப்படிப் பேசினுல், நமது மாநிலத்துக்குத்தானே இழுக்கு, இப்படிப்பட்ட மதி மந்திரியைப் பெற்றிருக்கிருேமென்று! திட்டம் நேருவின் கனவிலே உதித்து, மறுநாள் ஏட்டிலே பிரதிபலித்ததல்ல. அதற்கென இருக்கும் ஒரு கமிஷன் கூடி வரையறுத்ததாகும். அந்தக் கமிஷனில், யாரார் தேசீயத் தியாகிகளால், பிரிட்டிஷ் கைக்கூலிகள் என்று தூற்றப்பட்டனரோ அதுபோன்ற வி.டி. கிருஷ்ணமாச்சாரிகள் அமர்ந்து சிருஷ்டித்ததாகும்! குழுவின் தலைவர் நேரு வென்ருலும், திட்டத்தைத் தீட்டியவர் நேருமட்டுமல்ல. எனவே, அவருக்குப் புகழ்தேடுவதாக எண்ணி, அமைச்சர் பெருமகன், புலம்புவது அழகல்ல.

அப்படியே நேருவின் வரப்பிரசாதம் என்றே கருதிடினும், அத் திட்டம் அமைச்சர் கூறுவது போல, கானக் குயிலா! கருத்தைக் கவரும் மயிலா!!

"இப்படி, ஒரு வரை முறையில்லாமல், மனம் போன போக்கில் போடுவதா, திட்டம்? இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஒரே குழப்பமாகவல்லவா இருக்கிறது!"

கூறுவது நாமல்ல, நேருவால், பெரியதொரு அறிஞர் எனக் கவுரவிக்கப்பட்டவர்; பண்டித குன்ஸ்ரு என்பார் கடந்த கிழமை டில்லி மேல் சபையில், இவ்வாறு கண்டிக்கிருர், ஐந்தாண்டுத் திட்டத்தை.

திட்டம் தீட்டுவது எனில், அது வெறும் காகித ரோஜாவாகயிருந்து என்ன பயன்? மணமுள்ள மலராக இருக்கவேண்டும்! அதன் பயனை, இந்திய உபகண்டத்து முடிசூடா மன்னர்கள் என்று வர்ணிக்கப்படும் ஏழை விவசாயியும், மோழையாகிக் கொண்டிருக்கும் தொழிலாளியும், உணரும் நிலை ஏற்படவேண்டும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்துவிட்டது! வெற்றி, வெற்றி, சாதனைகள் பல—என்று பறைசாற்றுகிருர்கள். விவசாயத் துறையில், வெற்றி கண்டுவிட்டார்களாம்! எதிர்பார்த்ததைவிட, உற்பத்தி பெருகிவிட்டதாம்!

ஏட்டிலிருக்கும் புள்ளி விபரங்களை வைத்துக்கொண்டே, எதையும் கணக்கிடத் துவங்குகிருர்களே ஒழிய நாட்டின் நாடிகள் எப்படி உள்ளன வென்று அறிகிருர்களில்லை — என்ருருவர், டில்லியினைப் பற்றிச் சுட்டிக் காட்டியதுபோல, ஏதோ சில கணக்குகளைக் காட்டுகிருர்கள்! சினிமாக்களிலும் 'ஸ்லைடு' போட்டு விளக்க முற்படுகிருர்கள்!

**அரங்கண்ணல்**

அதோ, கலப்பைத் தூக்கிச் செல்லுகிருனே அவன் வாழ்க்கையில், என்ன மாற்றம் கண்டான், இந்த உற்பத்திப் பெருக்கால்? அவன் விற்கும் அரிசியை நம்பி வாழும் குமாஸ்தா என்ன நலம் பெற்ருர் இந்த உற்பத்திப் பெருக்கால்? அரிசியின் விலை குறைந்துவிட்டதா! அடிபட்டாலும் உதைப்பட்டாலும் 'ஐயன்விட்ட வழி' என்று கருதியுழைக்கும் ஏழை விவசாயியின் இல்லம் ஆனந்தபுரியாயிற்ரு? நேரில் சென்று பார்த்தால், பலன் என்னவென்று புரிவதில்லை. ஏழையின் ஏக்கமும் துக்கமும் குறைந்ததாகத் தென்படவில்லை—பீகாரில், விவசாயிகள் கிளர்ச்சி செய்கிருர்கள்! ஐக்கிய மாகாணத்தில் கிசான்கள் போராட்டம் துவக்குகிருர்கள்! தஞ்சை போன்ற இடங்களிலும் வேலை நிறுத்தமும், கூலிக்குரலும் எழும்புவதைக் காண்கிருேம்!

"மேற்பூச்சாகக் கண்டித்துவிட்டால் போதுமா? எவ்வளவு ஆலைகள் பிரம்மாண்டமாகஎழும்பியுள்ளன! அணைக்கட்டுகள் எத்தனை கட்டப்படுகின்றன" என்றுகேட்கக் கூடும். உண்மைதான், வானளாவும் ஆலைகளும், வரைகளை அடக்கிக் கட்டப்படும் தேக்கங்களும் பல உள்ளன.

ஆனுல் அவைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் தொகை என்ன?—என்று நாம் அல்ல டாக்டர் ஜயசூர்யா எனும் பார்லிமெண்டு உறுப்பினர் கேட்கிருர்.

"ஏன் இந்தியாவில் இயந்திரங்களைக் கொண்டு வந்து அடைக்கவேண்டும்! எவ்வளவு மனிதசக்தி இருக்கிறது! அதைப் பயன்படுத்தி இந்தக் காரியங்களைச் செய்யக் கூடாதா? நான் சீனுவுக்குச் சென்றிருந்தபோது பார்த்தேன். அங்கு மனித சக்திக்குத் தான் முதலிடம் தருகிருர்கள். சீனுவைவிட நாம் என்ன பிரமாதமாக முன்னேறிவிட்டோம். ஏன், அப்படிச் செய்யக்கூடாது?" என்று கேட்கிருர். எனவே, ஐந்தாண்டுத் திட்டத்தின் பெயரால், அழிந்திருக்கும் பணம், ஏராளம். அவைகளில் பெருந்தொகை, அந்நிய நாடுகளுக்கு இயந்திரத்துக்காகவும், நிபுணர்களுக்காகவும் அழிக்கப்பட்டிருக்கிறது. அத்தப் பணம், இங்குள்ள மனிதர்களுக்காகச் செலவிடப்பட்டிருந்தால் எத்துணை பேருக்கு வேலை கிடைத்திருக்கும், திண்டாட்டமும் குறைந்திருக்கும்?

விவசாயம்—போக்குவரத்து மட்டுமல்ல, கல்வித் துறையில் நாம் கண்டிருக்கும் பலன் என்ன? இங்கிருந்து டில்லி மேல்சபைக்குச் சென்றிருக்கும் தோழியர் நல்லமுத்து ராமமூர்த்தி கேட்

கிருர், "16-வயது வரையில் இலவக் கல்வி தரவேண்டுமென்பது அரசியலமைப்பிலுள்ள ஷரத்தாயிற்றே? என்ன செய்யப்பட்டிருக்கிறது, இதுவரை. பெண்களின் கல்வி விஷயத்தில் என்ன செய்திருக்கிறீர்கள் நீங்கள்?" என்று.

இப்படி இவர்கள் எல்லாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அழகினைப் பற்றிக் கண்டித்ததைக் கேட்ட புதிய நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரியார் எழுந்து, "ஐந்தாண்டுத் திட்டம், அப்பழுக்கற்றது என்று நாங்கள் சொல்லவில்லை. எவ்வளவோ, ஓட்டைகளிருக்கலாம். அவைகளையெல்லாம் போகப் போக நாமே சரிசெய்து கொள்ளவேண்டியதுதான்" என்று கூறியிருக்கிருர். நேருவும், இதே கருத்தை வலியுறுத்தி, விளக்கம் தந்துள்ளார், பார்லிமெண்டில்.

ஆனால் நமது நிதி அமைச்சர், எமது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போலுண்டோ—இதுபோல உம்மால் ஒரு திட்டம் தீட்டமுடியுமோ, என்று சவால் விடுகிருர் நமக்கு!

முதல் திட்டம் முடிந்து, இரண்டாவது திட்டம் துவங்குவதற்கு டில்லியார் ஆகுமென்று கணக்கிட்டிருக்கிற 4800 கோடி ரூபாயில் கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய்க்கு எங்கே போவதென்று தெரியவில்லையாம். "வாயைக் கட்டி வயிற்றைக்கட்டி நாம் எப்படியாவது இதைச் சரிகட்டவேண்டும்", என்கிருர் நேரு! எல்லாம் பார்த்துக் கொள்ளலாம் என்கிருர், டி. டி. கே. "பார்த்துக்கொள்ளலாம்...", என்று கூறுவதோடு கூடவே, மக்கள்தான் உதவவேண்டும் என்றும் தெரிவிக்கிருர்!! அதாவது மக்களுக்கு இன்னும் பல புதிய வரிகள் வரும் என்பது பொருளாகும்.

அப்படி வரி போட்டு மக்களிடமிருந்து வசூல் செய்திட இயலுமா? ஏழையிடம், பசிதானே இருக்கிறது, தர! — என்றும் பலர் கூருமலில்லை. இப்படி, ஐயமும், குழப்பமும் உள்ள நிலையிலிருக்கிற ஐந்தாண்டுத் திட்டத்தை மாபெரும் வரப்பிரசாதமென்று கருதுகிருர் நமது மதியூக மந்திரி!

பேரறிஞர்கள் கண்டிப்பது போல இல்லாது, உன்னதமான ஒரு திட்டமாகவே இருக்கட்டும்.

அதனுல், நமக்கு என்ன பயன்?

அமைச்சரே அறிவார்! அண்மையில், அவர்கூடக் குறைபட்டுக் கொண்டிருக்கிருர், "பதினெட்டு தொழிற் கல்லூரிகள் கட்டப்போகிருர்களாம், டில்லியினர், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கோ......!", என்பதாக. அதிகத் தொகை கேட்டு, மூக்கறுபட்டு வந்தவர்தான், சுப்பிரமணியம்! எனினும் இப்படிப் பேசுகிருர், இதைப் போல ஒரு திட்டம் உண்டோ என்று!

இப்படி வரப்பிரசாதம் என்றும் பூலோக சுவர்க்கத்தை அமைக்கப் போகும் திட்டமென்றும் கூறப்படும் இதைப்பற்றிப் பாமர மக்களிடம் எவ்வித பரபரப்புமில்லை-அவர்கள் இதைப் பற்றி எள்ளளவும் சிந்தித்தாரில்லை—என்று குறைபட்டுக் கொள்கிருர் இன்னொரு மந்திரி பக்தவத்சலம். ஏடுகள் மூலம், எவ்வளவு விளம்பரம் செய்தாலும், படிப்போர் தொகை நாட்டில் கொஞ்சமாக இருக்கிற காரணத்தால், பரவவில்லை என்று குறைபட்டுக் கொள்கிருர்.

மக்களுக்காகத் தீட்டப்படும் திட்டங்கள், மணம் தரத்தக்க வையாயிருந்தால், விளம்பரமும், 'கிராமபோன் பிளேட்டுமாவேண்டும்.

மக்கள் மன்றம் கவனிக்குமளவுக்கு ஐந்தாண்டுத் திட்டத்தால் நமக்கேதும் ஏற்படவில்லை என்றுதானே பொருள்.

இதனை உணரவேண்டும் அமைச்சர்கள்! அதற்குப் பதில், "அருமையான பெருங்காயம்—அவசியம் வாங்கிப் பார்ப்பீர்!" என்பதுபோல விளம்பரம் செய்யவேண்டுமாம்!

செச்சே, நினைக்கவே வேதனையாயிருக்கிறது.

இந்த இலட்சணத்தில், இது ஒரு வரப்பிரசாதமாம்.

★

# கியாதி போதுமா?

"இந்தியாவின்கியாதிவெளிநாடுகளில் பெருகி வருகின்றது என்று திரு. நேரு சொல்கிருராம். இந்தக் கியாதியானது ஓர் நாட்டை பொருத்தா ஓர் நபரைப்பொருத்தா என்று பொருள்படுத்த வேண்டியிருக்கிறது. இந்திய சுயராஜ்ஜியம் பெற்று சுமார் 9 ஆண்டுகளாகின்றது. நாம் இன்னும் குழந்தைப் பருவத்தில்தான் இருக்கிரேம். நாம் வெகு ஏழ்மையாகவும் இருக்கிரேம். இதை சீர்திருத்த வேண்டியது வெகு அவசியமாக இருக்கிறது. சுதந்திரத்திற்கே எதிரியான இனச் சண்டை இன்னும் நாட்டைவிட்டு விரட்டப்படவில்லை.

மொழிவாரி மாகாணப் பிரச்னையால், மேலும் மேலும் அரசியல் சண்டைகளும் அதிகரித்து வருகின்றன. இவைகளை யெல்லாம் கவனிக்கவேண்டியது, அவசியமேயாகும்.

சிறிதாய் கட்டி பெரிதாய் வாழ் என்ற பழமொழிபோல், நமது நாட்டின் உள் நலனைக் கவனிக்க வேண்டியதுதான் முக்யமே தவிர, அயல் நாடுகளில் கியாதி எதற்காக? கியாதிசோறுபோடுமா? ஏழை நாடாகிய இந்தியாவின் தலைவர்கள், அன்னிய அரசியலில் ஈடுபடுவதால் ஏழை மக்களின் பணத்திற்கு செலவுகள்தான் ஏற்படுகிறது.

நமது நாடோ ஜனநாயக தேசம், நமது ஜனநாயகம் அபிவிருத்தியாவதின் பொருட்டு ஜனநாயக நாடுகளுடன், கொஞ்சம், தொடர்பு கொண்டாடினுல் போதும்; உலகிலுள்ள ஏகாதிபத்தியம், சர்வாதிபதித்யம், இச்சாதிபத்தியம் போலுள்ள எல்லா நாடுகளுடனும் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமா என்று கவனிக்க வேண்டியிருக்கிறது.

சமீபத்தில் லோக் சபையில் இம்மாதிரி விஷயங்கள் பேசப்பட்டு வந்தபொழுது, சில அங்கத்தினர்களாவது மேல் சொல்லிய விஷயங்களை எடுத்துரைப்பார்களென்று நம்பியிருந்தோம். அவர்களில் சிலருக்கு ஐயமேற்பட்டு விட்டதோ, அல்லது ஆமாஞ்சாமி மனப்பான்மை ஏற்பட்டுவிட்டதோ என்னவென்று தெரியவில்லை. எவரும் இதை எடுத்துப் பேசவில்லை. இன்று இந்தியாவானது, வெளிநாடுகளில் பெரும் கியாதி பெற்றிருக்கிறதென்ருல் இந்தக் கியாதி ஓர் நாள், தொந்திரவாக மாறினுலும்மாறலாம். இந்தக் கியாதியை நிலைநாட்டுமளவு நமக்கு ராணுவ பலமில்லை. ஆகையால் நமது நாட்டை ஓர் வல்லரசு நாடாக இப்பொழுதுகூறமுடியாது. ஆகவே நமக்கு அளவுக்கு மீறி அன்னிய அரசியல் எதற்கு?"

திருச்சியிலிருந்து வெளி வரும் 'காங்கிரஸ்' எனும் ஏடு இவ்விதம் கேட்கிறது,

★

*6-ம் பக்கத் தொடர்ச்சி*

காரப் பேச்சினாலே உண்மையை மறந்துவிடச் செய்யமுடியும்?

எனவே தம்பி, சொத்தை வாதத்தை மெத்தச் சிரமப்பட்டு, மெச்சுவதற்கு யார் கிடைக்காவிட்டாலும், அடுத்த தேர்தலுக்கு மனு போட்டிருக்கும் மகானுபாவர்களாவது பாராட்டுவர் என்ற எண்ணத்தில் அமைச்சர் பேசுகிறார், அந்த மகானுபாவர்களிலே பலரும், ஜஸ்டிசில் இருந்தவர்கள்!!

மற்றோர் பெரிய தவறு நாம் செய்கிறோமாம் — தேமதுரத் தமிழோசை அவர் செவியைத் துளைக்கிறதாம்!! ஏண்டா, தம்பி, தமிழின் எழில் விளங்கப் பேசுகிறாய்? பார்! அமைச்சருக்கு எவ்வளவு ஆத்திரம் வருகிறது; அமைதி அழிகிறது; அழுது விடுவார் போலிருக்கிறது. நானே கூடச் சொல்லலாமென்று இருக்கிறேன் — நீயும் சொல்லு — மலையினின்றும் கிளம்பும் சிற்றாறின் ஒலியோ, மங்கை நல்லாள் மதலைக்கு முத்தமிட்டுக் கொஞ்சும் போதும், மணவாளனிடம் பேசி மகிழ்ந்திருக்கும் வேளையிலும் கேட்கக் கிடைக்கும் சிரிப்பொலியோ, வாட்போரின் போது கேட்கும் ஓசையோ, தென்றலோ, புயலோ, தேனோ, என்றெல்லாம் பலரும் பலப்பட எண்ணி மகிழத்தக்க விதமாக, இனிப் பேசி, இந்த அமைச்சரின் இதயத்தை வாட்டாமலிருக்கும்படி, நமது நாவலருக்கும், மற்றையோருக்கும் எடுத்துச் சொல்லவேண்டும்.

சீவிச் சிங்காரித்துக்கொண்டு, முல்லை சூடி, முறுவலுடன், இடுப்பில் குழந்தையுடன் இதயத்தில் மகிழ்ச்சியுடன் இள மங்கை செல்லக் கண்டால், பதியை இழந்ததால் பசுமை உலர்ந்து போன பரிதாபத்துக்குரிய 'மொட்டை'க்குக் கோபமும் சோகமும் பீறிட்டுக் கொண்டுதானே வரும்! அமைச்சருக்கு நாம் ஏன் அந்த அல்லல் தரவேண்டும்!!

அவர் நமது கழகத் தோழர்கள் பேசும் மொழியில் ஏற்றமும் எழிலும் இருந்திடக் காண்கிறார் — எரிச்சல் பிறக்கிறது — அதை மறைத்துக்கொள்ளும் ஆற்றலும் அற்றுப்போய், அழகாகப் பேசி, அடுக்குமொழி பேசி, மயக்கிவிடுகிறார்கள் என்று கூறி மாரடித்து அழுகிறார்! நாம் என்ன செய்வது, தம்பி, வேண்டுமென்றே, தமிழின் இனிமையைத் தேடிப் பிடித்திழுத்தா வருகிறோம். தமிழ் உள்ளம் நமக்குத் தமிழ் இனிமையைத் தருகிறது; அமைச்சரின் நிலை அது அல்லவே.

உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசவேண்டிய நிர்ப்பந்தப் தாக்குகிறது.

உண்மை தெரிகிறது, அதை மறைத்தால்தான் பதவி என்பது குடைகிறது.

எந்தத் துறையிலே பார்த்தாலும் வடவர் வளம் பெறுவதையும், தென்னவர் திகைப்புண்டு கிடப்பதையும் அறிகிறார், உள்ளத்தில் சோக அலை கிளம்புகிறது, கோபப் புயல் வீசுகிறது, ஆனால் அந்த வெல்வெட்டு மெத்தையில் அமர்ந்து எண்ணிப் பார்க்கும் போது, தெற்குத் தேய்ந்தாலென்ன, காய்ந்தாலென்ன, என்ன சுகம்! என்ன சுவை, இந்தப் பதவி! என்று சபலம் பிறக்கிறது; அமைச்சரின் பேச்சு, உள்ளத்தில் உள்ளதை மறைத்திடப் பயன்படுத்தப்படுகிறது, அதனாலேயே பேச்சிலே சூடு இருந்தால் சுவை இல்லை, சுத்தம் இல்லை! சூட்சமம் அதுவே தவிர அவருக்கென்ன அகமும் புறமும் படித்திட, தமிழின் அருமையும் இனிமையும் அறிந்திட, எதுகை மோனையை அழைத்திட, எழிலும் சுவையும் பெற்றிடவா இயலாது! நம்மைவிட அதிகம் முடியும்!! ஆனால். உள்ளத் தூய்மைவேண்டுமே! கொள்கை ஆர்வம் தேவையாயிற்றே! தெளிவும் துணிவும் நிரம்பவேண்டுமே! அதை எங்ஙனம் அவர் பெறுதல் இயலும்—அமைச்சராயிற்றே!

அமைச்சர் பேசியதாக 'தினமணி' கூறுகிறது, நான் ஓர் மாபாதகம் செய்துவிட்டிருப்பதாக. அவர் மனச்சங்கடம் அடைந்திருக்கிறார் என்று தெரிகிறது. என்ன என்கிறாயா? கேள், தம்பி, நான் ரோமாபுரி ராணிகள் — ஓர் இரவு—என்றெல்லாம் ஏடுகள் எழுதினேனாம்—எனவே, இதுதான் இவர்கட்குத் தெரியும், வேறென்ன தெரியும்—என்று ஏளனம் செய்ய முற்படுகிறார், அமைச்சர் பெருமான்!

அமைச்சர் பெருமானுடைய கவனத்தை ஓர் இரவும் ரோமாபுரி ராணிகளும் ஈர்த்திருக்கும் உண்மை எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதல்லவா—மகிழ்ச்சி—மெத்த மகிழ்ச்சி. கரைதிரை மூப்பு என்பவைகளுக்கு ஆளான தொண்டு கிழங்களே, ரோமாபுரி ராணிகளிடம் சிக்கிக்கொண்டனர் என்றால், வாலிப முறுக்குக் குறையாத அமைச்சர், அவர்களிடம் சொக்கிப்போனதிலே ஆச்சரியமில்லை. ஆனால் இதிலே ஆச்சரியம் என்ன தெரியுமா தம்பி, கயல்விழி, மையல் மொழி, காட்டியும் ஊட்டியும் கட்டழகிகள் கருத்தைக் கெடுப்பர், காரியம் குலைப்பர், ரோம் சாம்ராஜ்யம் அழிந்துபட்டதற்கு வேல்விழி மாதரிடம் வாள் ஏந்திய வீரர்கள் அடிமைப்பட்டது ஒரு காரணம் என்று எச்சரிக்கைசெய்ய, நான் அந்த ஏடு எழுதினேன். அமைச்சர், பாவம், அதைப் படித்து, பெறவேண்டிய பாடம் பெறாமல், வேறு ஏதேதோ எண்ணங்களைப் பெற்று, மெத்தச் சிரமப்பட்டிருக்கிறார்போலும்; அதனாலேதான், அவர் அத்துணை கோபத்துடன், ரோமாபுரி ராணி புத்தகம் எழுதியதைக் கூறியிருக்கிறார்.

அமைச்சரே! அலை மோதும், அடக்கிக்கொள்க! ஆசை வந்து உந்தும், ஆட்பட்டுவிடவேண்டாம். அந்த ஏடு, சுவையூட்டிச் சூறு வளியை மூட்டிவிடும் சுந்தராங்கிகளிடம், அரசியல் உலகத்து அதிபர்கள், ஆழ்வார்கள், அடிவருடிகள் எனும் எவரும் சர்வஜாக்ரதையாக இருக்கவேண்டும், ஏனெனில், ரோம் சீரழிந்ததே, கோலமயிலனையார், கண்டாரைக் கொல்லும் விழியால் தாக்கியதனால்தான் என்று எடுத்துக் கூறவே எழுதப்பட்டது அந்த ஏடு.

இது, சபலம் எழும்போதெல்லாம், அமைச்சர்போன்று பெரிய நிலைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் படித்துப் பாடம் பெற்று, பதமும் பக்குவமும் கெடாதபடி தம்மையும் நாட்டையும் பாதுகாத்துக்கொள்ள உதவவேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதப்பட்டது.

படித்துவிட்டு, பாடம் பெறாமல், பெருமூச்சு விடுவதும், ஆஹா!

அந்தக் காலம், எப்படிப்பட்ட அருமையான காலம்! என்று ஏங்குவதும், இது அதுபோலவா? கண்டால் புன்னகை மலருகிறது, கைபட்டால் முகம் சுளித்துக்கொள்வதும் தெரிகிறது. தொட்டால் துவளும் போக்கு அல்லவோ ஆனாலும், கனியவைத்திடக் காலம் அதிகம் தேவைபோலும் என்றெல்லாம் எண்ணமிடுவதும் சிலருக்கு ஏற்படுகிறது எனின் குற்றம் என்னுடையதல்ல. கிடைத்த பாலை குழந்தைக்குத் தந்து மகிழ்ந்திடும் மதியூகியும் உண்டு, பாம்புப் புற்றுக்கு வார்த்துவிட்டு பரமபதத்துப் பேரேட்டிலே பெயர் பதிவாகிவிட்டது என்று எண்ணிக்கொள்ளும் ஏமாளியும் உண்டு! குற்றம், பாலில் இல்லை!!

அமைச்சர் இப்போது காங்கிரஸ் வட்டாரத்திலே இடறி விழுந்தால், ஓர் இரவு எனும் ஏட்டிலே நான் காட்டி இருக்கும் ஜெகவீரர் மீதுதான் விழவேண்டும் — அத்தகையோரின் கெடுமதியைக் கண்டிக்க ஏடு எழுதுவது, எந்த வகையான குற்றமோ-எனக்குத் தெரியவில்லை —காலஞ் சென்ற 'கல்கி'யும் வ.ரா.வும் அவ்விதம் கூறவில்லை! அவர்கள் ஏதேனும் குறை காட்டியிருந்தால், நான் திருத்திக்கொண்டிருப்பேன். அமைச்சர் போன்றவர்கள் அந்த ஏடுகள் குறித்து ஏதேதோ பேசும்போது, எனக்கு அவர்கள் அந்த ஏடுகளிலிருந்து பெறவேண்டிய பாடத்தைப் பெறவில்லை என்றுதான் தெரிகிறது. அவர்களை எல்லாம் திருத்தும் ஆற்றலையா நான் பெற்றிருக்கிறேன்! நாட்டு மக்கள்தான் அவர்களைத் திருத்தவேண்டும். சீதையை இராவணன் சிறைபிடித்ததைக் கூறிடும் சம்பவத்தைக் கவி கூறுவது எதற்கு? அதுபோல ஒன்று கிடைக்காதா, இராவணன்போல கெஞ்சிக் கிடக்காமல், வஞ்சியைப் பஞ்சணை விருந்தாக்கிக்கொள்ளலாமே. என்ற கெடுமதி பெறுவதற்கா?

ஓர் இரவு,—ரோமாபுரி ராணிகள்—மேலிடத்தில் உள்ளவர்கள் ஒழுக்கத்தைத் துணைகொண்டால்தான் நாடு உருப்படும் என்ற உண்மையை உணர்த்தும் ஏடுகள்!

துரோபதை துகில் உரியப்படும் சம்பவத்தைப் படிக்கக் கேட்டு, பரிதாபப் படவேண்டும், அக்ரமம் இந்த அளவுக்கா போவது என்று கொதித்தெழ வேண்டும் என்று எதிர்பார்ப்பது முறை — துகிலா உரிந்தார்கள்...... ஆஹா.....பலே! பலே!...சொல்லு சொல்லு...எப்படி எப்படி உரிந்தார்கள்...என்று ரசித்துக் கேட்டபடி, எதை எதையோ எண்ணிக்கொண்டு, உதட்டை மடக்கிக் கடித்துக் கொள்ளும் உலுத்தர்கள் இருக்கத்தான் செய்வார்கள்! அதற்கென்ன செய்யலாம்.

கிடக்கட்டும், நான் வகை கெட்டவன், ஓர் இரவும், ரோமாபுரி ராணியும் குறித்து மட்டுமே எழுதினேன்; இதனை ஏளனம் செய்து எரிச்சல்பட்டுப் பேசுகிறாரே, இவர் தீட்டி, நாட்டவருக்குத் தந்துள்ள கேடு நீக்கிடும் ஏடுகள், யாவை?

இவர் தீட்டிய ஓர் அரசியல் விளக்க ஏடு வெளிவந்த பிறகுதான் உலகப் பெரும் தலைவர்கள் ஒன்றுகூடி, உண்மையை உணர்ந்து ஐக்கிய நாடுகள் சபையையே அமைத்ததுபோலவும், இவர் அளித்த விஞ்ஞான விளக்க ஏட்டினைப் படித்த பிறகே ஈன்ஸ்டின் தத்துவத்தையே உலகு பெற்றதுபோலவும், இவர் கீதைக்குப் புது வியாக்யானம் தீட்டிடக் கண்டு, கண்ணனே ஆச்சாரியார் கனவில் தோன்றி, கண்ணன் காட்டிய வழி என்று நீர் வெளியிட்ட ஏடு சரியில்லை, நமது பக்தன் பண்டித சிகாமணி சுப்ரமணியம் தீட்டியுள்ள ஏடுதான் சரியானதாகும் என்று எடுத்துரைத்ததுபோலவும், 'உலகப் பேருண்மைகள்' என்று இவர் ஓர் ஏடு தீட்டிட அதிலே உள்ள கருத்துரையைக் காணவே, நேரு பண்டிதர் ரஷியாவுக்கும், கிரீசுக்கும், சவுதி அரேபியாவுக்கும், பிரான்சுக்கும் இப்படித் தேசம் தேசமாகச் சுற்றி அலைந்து தேடிக்கொண்டிருப்பதுபோலவும், நோபல் பரிசு வருஷா வருஷம் எனக்கே தருகிறீர்களே, மற்றவர்களும் பிழைத்துப் போகட்டும் பாவம் என்று இவராகப் பார்த்து நிறுத்திக்கொண்டதுபோலவும், பேசுகிறாரே, தம்பி, இவர் தீட்டி நாட்டுக்கு நீட்டிய ஏடு எத்தனை?

இன்றுவரையில், சொத்தையோ சோடையோ இவர் பார்க்க, படிக்க, கண்டிக்க, வெறுக்க, நான், ஏடு தந்ததாகத் தெரிகிறதே தவிர நான் படித்திட இவர் ஒரு ஏடும் தந்ததாகத் தெரியவில்லையே! இந்த மலடியா என் படைப்புகளை நையாண்டி செய்வது? பரிசீலனை நடத்தும் உரிமையே உண்டா என்பது சந்தேகம்!

வடநாட்டவர் பொருளாதாரத் துறையிலே படுத்தும் பாடுகளை விளக்குவது பணத்தோட்டம்-ரோமாபுரி ராணிகள் மட்டும் படித்ததாகக் காட்டிக்கொள்ளும் இந்தக் 'கனம்' இதைப் படித்ததுண்டா? நாடு, படித்தது.

தமிழன் 'கலிங்கம்' வென்ற வீர இனத்தவன் என்பதைக் கதை வடிவமாக்கியது கலிங்கராணி— அமைச்சர் கண்சிமிட்டிக் கருத்தழித்த ரோமாபுரி ராணிகளைக் கண்டு, சொக்கிப்போய் நின்றுவிட்டார், கலிங்க ராணியைக் காண முடியவில்லை, பாபம்!

பொது வாழ்க்கைத் துறையிலே உள்ள போலிகளை அம்பலப்படுத்துவது பார்வதி B. A. பார்த்ததில்லை அமைச்சர் — மற்றும் பல. ரோமாபுரி ராணிகள்—ஓர் இரவு— இந்த இரு ஏடுகள்தான் இவருக்குச் சுவை தந்தனபோலும்.

பேசத்தெரியும், இதுபோன்ற ஏடுகள் தீட்டத் தெரியும் என்று கூறிவிட்டதோடு, நிற்கவில்லை அமைச்சர். நான் செய்யவேண்டிய 'வேலை' என்ன என்பதுபற்றியும் கூறுகிறார்.

தம்பி! தேர்தலில் ஈடுபட, நாம் முனைகிறோமல்லவா— பலருக்கு இது பலத்த அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

**நமது பலம் பெரிது என்பதற்காக அல்ல, அவர்களுடைய பலக்குறைவு அவ்வளவு அதிகம்; அதனால்.**

பதவி ஆசை பிடித்துக்கொண்டது, அதனால்தான் தேர்தலுக்கு வருகிறார்கள் என்று பதவியில் பிசின்போல ஒட்டிக்கொண்டுள்ள இந்த உத்தமர்கள் பேசினர்.

அச்சம் காரணமாகவோ, அல்லற்படவேண்டிவருமே, என்ற சங்கடம் காரணமாகவோ, இவர்கள் இவ்விதம் பேசக்கூடும் என்று

எண்ணிக்கொண்ட நான், இரண்டோர் திங்களுக்கு முன்பு மதுரையில் பேசினேன், "ஐயா காங்கிரஸ் நண்பர்களே! ஆயாசப்படாதீர்கள்! எமக்குப் பதவியும் வேண்டாம், இடமும் தேவையில்லை; தேர்தலில் போட்டியிடாதபடி எம்மைத் தடுத்திடும் வாய்ப்புக் கூட நான் தருகிறேன்; இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆறு ஆயிரம் கோடி செலவழிக்கப்படும் என்கிறீர்கள்; முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேதான் தென்னாடு ஏமாற்றப்பட்டது இப்போதாவது, முன்னாலே வஞ்சகம் செய்யப்பட்டதற்குப் பரிகாரம் தேடும் முறையிலும் இப்போதைக்கு நீதி வழங்கும் தன்மையிலும், தென்னாட்டுக்கு 2000-கோடி ரூபாய் ஒதுக்குவதாக, நேருபண்டிதரை வாக்களிக்கச்சொல்லுங்கள்; அந்த வாக்குறுதி கிடைத்தால், நாட்டுக்கு 2000 கோடியும் அதன் பயனாகப் பல நற்பயனும் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியுடனும், நாம் முயற்சி எடுத்ததால், இந்தப்பலன் நாட்டுக்குக் கிடைக்கிறது என்ற திருப்தியுடனும், நாங்கள் தேர்தலில் நிற்பதைக் கூட விட்டுவிடுகிறோம், என்றேன்.

இது சில நாட்கள், கவனிப்பாரற்றதாக இருந்துவந்தது.

நாட்டுமக்கள், இதனைக் கவனிக்கும்படியான அரிய தொண்டாற்ற முதலில் கம்யூனிஸ்டு கட்சி பாடுபட்டது; நான் சொன்ன யோசனையை ஆதரிப்பதன் மூலமாக அல்ல; நையாண்டிசெய்வதன் மூலமாக.

திராவிடநாடு கூட வேண்டாம் போலிருக்கிறது, 2000-கோடி ரூபாய் கொடுத்தால் போதுமாம்—அண்ணாத்துரையின் அரசியலைப் பார்த்தீர்களா — 2000-கோடி கிடைத்துவிட்டால், தேர்தலில் கூட ஈடுபடாமல் விலகிக்கொள்வார்களாம் — இப்படி இருக்கிறது 'இதுகளோட' அரசியல்'—என்று கம்யூனிஸ்டுகள் கேலிபேசினர்.

இது மக்களிடம் நமக்கு இருந்த 'மதிப்பை' உயர்த்தியதை, அவர்கள் அறியவில்லை.

இதுவா அரசியல்? என்று கம்யூனிஸ்டுகள் கேட்டுக் கேலிசெய்ததிலிருந்தே, மக்களுக்கு ஒன்று புரிந்தது: மற்ற மற்ற கட்சிகளைப் போல அல்லாமல், முன்னேற்றக் கழகத்தார், நாட்டுக்கு நன்மை கிடைப்பதானால் நாங்கள் தேர்தலைக் கூட மறந்துவிடுகிறோம் என்றல்லவா தெரிவிக்கிறார்கள், தேர்தலில் ஈடுபட்டுத் தமது கட்சிக்குப் புதிய அந்தஸ்து தேடிக் கொள்வதுதான் குறிக்கோள் என்று இல்லாமல், நாட்டுக்கு 2000-கோடி ரூபாய் ஒதுக்கினால், தேர்தல் வாய்ப்பும் வேண்டாம் என்றல்லவா கூறுகிறார்கள்— கட்சியைவிட, நாடு பெரிது என்று கருதும் இவர்களல்லவா, உண்மை ஊழியர்கள், என்று மகிழ்ந்தனர்.

இப்போது, கம்யூனிஸ்டுகள் செய்த 'தொண்டு' மேலும் திருத்தமாக, சுப்ரமணியனார் மூலம், செய்யப்பட்டிருக்கிறது.

இவர், கம்யூனிஸ்டுகளை விட பலபடி தாவிச் சென்று 'ஆக்ரோஷத்துடன்' பேசியிருக்கிறார் என்பது எல்லா ஏடுகளிலும் தெரிகிறது.

**'அண்ணாத்துரை 2000-கோடி ரூபாய் தரப்படவேண்டும் என்று கூறுகிறார்; சரி; 2000-கோடிக்கு, நல்ல திட்டம் தீட்டட்டும், அதை ஒரு அயல் நாட்டு நிபுணர் ஒப்புக்கொள்வாரானால் நான் என் மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்துவிடுகிறேன்** — என்று பேசியிருக்கிறார்.

படித்ததும், தம்பி, எனக்கு முதலில் பரிதாபமாக இருந்தது.

திட்டம் தீட்டினதும், முதலில் களப்பலிபோல, இவருக்குப் பதவி போய்விடுமாமே, அந்தோ, பரிதாபமே, எவ்வளவு சிரமப்பட்டுப் பெற்றார், எத்துணை இராஜதந்திரத்தைக் கொண்டு, ஆபத்தினின்றும் தப்பிப் பிழைத்தார்; கடைசியில் நம்மாலா இவருடைய பதவிக்கு 'முடிவு' ஏற்பட வேண்டும், என்றெல்லாம் எண்ணத் தோன்றிற்று.

நான் 2000 கோடி தென்னாட்டுக்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டது, இவருடைய 'பதவி'க்கு முடிவு காண அல்ல! அது சாதாரணமாகவே, காலாவதி ஆகிவிடக்கூடியது! இவர், ஏன், பதவியை, இதற்காக இழக்கவேண்டும்! தாராளமாக இருக்கட்டும். அதிலும், எப்போது இவர் திட்டம் திட்டச் சொல்லி என்னை அறைகூவி அழைக்கிறாரோ, இவரேதானே இருந்து அதை நிறைவேற்றித்தர வேண்டும்! ஏன், ஓடிவிடப் பார்க்கிறார்!

ஆனால் உண்மையில் அப்படி ஓடிவிடக் கூடியவரா? செச்சே! அதற்கு வேறு ஆளைப் பாருங்கள்! ஆச்சாரியார் ஆட்சியின் போது, குலக்கல்வித் திட்டத்தை முழு மூச்சாக ஆதரித்தவர், பிறகு அது காமராஜர் ஆட்சியின்போது, குழிதோண்டிப் புதைக்கப்பட்டது கண்டும், கண்ணீர் வடித்துக்கொண்டு, நான்பெற்ற செல்வம் மடிந்ததே என்று மாரடித்துக் கொண்டு 'மந்திரி' வேலையை இராஜிநாமாச் செய்வார் என்று பலரும் கூறினர். அவரா இதற்கெல்லாம் இடம் கொடுப்பவர்! ஒட்டிக்கொண்டார்! அவர் புகுத்திய கல்வித் திட்டத்தை ஓட்டினர் — இவர் மட்டும், ஓட்டினவருடன் ஒட்டிக்கொண்டார்; ஓடிவிடவில்லை. பிசின் அவ்வளவு பலம்!!

**முகப்பில்......**

**'தணலில் தங்கத்'தில்**

**ஒரு காட்சி.**

தேவிகுளம் பீர்மேடு பெருவிட்டால் ......! என்று முழக்கமிட்டார்; நேரு பண்டிதர், 'மையமைய' அரைத்தெடுத்த கரியை முகத்தில் பூசினார்; செ! இதுவும் ஒரு பிழைப்பா? சட்டசபையிலும் மக்களிடமும் மார்தட்டித் தடடிப் பேசினோம், நமது வார்த்தைக்கு மதிப்பளிக்கவில்லையே டில்லி தர்பார், இந்த அவமானத்தைத் துடைத்துக்கொள்ளவாவது அமைச்சர் பதவியை இராஜிநாமாச் செய்வோம் என்று 'ரோஷம்' காட்டினாரா? அவரா!! காட்டியிருந்தால் இன்று கரூரிலும் மதுரையிலும் பிற இடங்களிலும், 'பிரமுகர்கள்' தரும் வரவேற்பு கிடைத்திருக்காதே!

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 400 கோடி தரவேண்டுமென்று, டில்லி சென்று. 'இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன் வாங்கி'க் கேட்டார், நேரு பண்டிதரோ, 'ஆடினார் ஆடி சாடினார் ஓட்டோட! "என்ன செய்தார், வேண்டாமய்யா இந்தப் பதவி என்று கூறி இராஜிநாமாச் செய்தாரா? செய்வாரா? சுவைசாமான்யமா?

எனவே, திட்டம் தந்தால் இராஜிநாமாச் செய்கிறேன் என்று பேசுவது, உண்மையல்ல; விளையாடுகிறார்!

திட்டம் தீட்ட எனக்குத் தெரியுமா, தெரியாதா, என்பதா, இன்று அரசியல் பிரச்சினை?

இதிலேயும், பார் தம்பி, அடிமைப் புத்தியை.

நம்மைப்போய் நையாண்டி செய்கிறார், அன்னிய மோகம் என்று; இவர் இலட்சணத்தைக் கவனித்தாயா? நான் திட்டம் தீட்டவேண்டுமாம், அதை ஒரு அயல்நாட்டு நிபுணர் ஒப்புக்கொள்ள வேண்டுமாம்!

# திராவிடநாடு

**அயல்நாட்டு நிபுணர்!!** ஏன் இந்த அடிமை மனப்பான்மை?

சரி, இனிப் பிரச்சினையைப் பார்த்திடுவோம்.

நான். அயல்நாட்டு நிபுணர் கண்டு மெச்சி ஏற்றுக்கொள்ளத்தக்க திட்டம் ஒன்று என்னிடம் இருக்கிறது, அதை நிறைவேற்ற 2000 கோடி தருக! என்று கேட்கவில்லை.

நான் கேட்டது, நீங்கள் தீட்டியுள்ள இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 2000 கோடிரூபாய் தென்னகத்துக்கு ஒதுக்குங்கள், என்றுதான் கேட்டேன் — கேட்கிறேன் — ஒவ்வொரு வாக்காளரிடமும் கூறி இதைக் கேட்கச் சொல்லப்போகிறேன்.

இப்போது, இந்த அமைச்சர் கொலுவிருக்கும் சென்னை ராஜ்யத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 170 கோடி!

## இவர் கேட்டது 400 கோடி! கிடைத்தது 170!

இந்த வெட்கக்கேட்டைப் போக்கிக்கொள்ள இவர் முனையாமலிருக்கலாம்; பதவி காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே வஞ்சிக்கப்பட்ட தென்னகம், இப்போது 2000 கோடி கேட்க உரிமை பெற்றிருக்கிறது.

**நான், 2000 கோடி என்று கேட்டபோது, என்னிலும் மிக மிகப் பெரிய தலைவர்கள் சார்பில் கேட்கிறேன். அமைச்சர் ஆச்சரியத்தால் மூர்ச்சையாகாமலிருக்கவேண்டும் நான் அவர் சார்பிலும்தான் கேட்கிறேன்!**

**தென்னுடு தொழில்துறையில் பின்னடைந்திருக்கிறது என்று இவரே கோவையில் இரண்டோர் திங்களுக்கு முன்பு கதறவில்லையா!**

**சிந்தாமணி தேஷ்முக், இது உண்மைதான் என்று ஒப்புக்கொள்ளவில்லையா?**

**தென்னுடு புறக்கணிக்கப்பட்டிருப்பதுபற்றி அனுமந்தய்யா ஆயாசப்படவில்லையா? தென்னேட்டி விசுவநாதம் தேம்பவில்லையா? வல்லத்தரசு கண்டிக்கவில்லையா? புன்னூஸ் புலம்பவில்லையா? அன்னுமஸ்கரினிஸ் கேட்கவில்லையா? இங்குள்ள தேசிய ஏடுகளேகூட அவ்வப்போது கண்டிக்கவில்லையா? இவ்வளவு மலையெனக்குவிந்திருக்கும் மனக்குமுறலின்பேரால், கேட்டேன்; என் 'மேதாவிலாசத்தைக்' காட்டிக்கொள்ள அல்ல.**

திட்டம் தீட்டித் தர நான்மட்டும்தான் என்ற 'அகம்பாவம் புகத்தக்க' விதமாக நான் பயிற்சி பெற்றவனுமல்ல' பதவி எனக்குத் தலைக்கனம் தரவில்லை.

திட்டம் தீட்ட நாட்டிலே உள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் உட்காரலாம் — எனக்கும் இடமளித்தால் இருக்கிறேன் — தொழில்துறை நிபுணர்கள் இருக்கிறார்கள், நிர்வாகஅலுவலர்கள் உள்ளனர், விஞ்ஞான வித்தகர்கள் உளர், பேராசிரியர்களின் அணிவகுப்பே இருக்கிறது, பாரெங்கும் உள்ள பல்வேறு முறைகளைப் பாங்குடன் அறிந்த பத்திரிகை ஆசிரியர்கள் பலர் உளர், அனைவரும் அமரலாம், அற்புதமான திட்டம் தீட்டலாம்—எந்த அயல்நாட்டு நிபுணரும் மெச்சத்தக்கவகையில்.

இதுமுறை—இது நெறி.

திட்டம் தீட்டு பார்ப்போம் என்று எனக்கு அறைகூவல் விடுவதா முறை? ஒருவகையில் இதனை எனக்கு அளிக்கப்படும் பெருமை என்றுகூட நான் எடுத்துக்கொள்ளலாம்–ஆனால் அகம்பாவம் என்னைப் பிடித்துக்கொண்டில்லை — எனவே, அருமையான திட்டம் தீட்டத்தக்க அறிஞர் பெருமக்கள் அனேகர் உள்ளனர் என்பதை அமைச்சருக்கு நினைவூட்டுகிறேன்.

அதெல்லாம் முடியாது, உன்னல் முடியுமா என்றே அமைச்சர் பிடிவாதமாகக் கேட்பதானுல், அந்த அறிஞர் பெருமக்களின் உதவியை நான் கேட்டுப் பெற்று, திட்டம் தருகிறேன் என்று உறுதி அளிக்கிறேன்.

அறைகூவலை நான் ஏற்றுக்கொள்கிறேன்— ஆனுல் அந்த **2000** கோடி ஒதுக்கும் அதிகாரம் இருக்கிறதே, அது என்னிடம் வீரதீரமாகப் பேசிடும் இந்த வித்தகரிடம் இல்லையே, என்ன செய்வது?

ஐந்தாண்டுத் திட்டம் தீட்டவும், தொகை ஒதுக்கவும் அதிகாரம்படைத்தவர் நேரு! இவர், கையேந்திநின்று, கிடைத்தால் மகிழ்ந்து, இல்லையென்ருல் கண்கசக்கிக்கொண்டு வரும் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் 'பொம்மை' தானே!

இவர் எனக்கு அறைகூவல் விடுப்பதும், நான் அதனை ஏற்றுக்கொள்வதும் என்ன பலன் அளிக்கும்?

நேரு பண்டிதர், இவ்விதம் கேட்பாரானுல், நான் அழைக்கக்கூடத் தேவையில்லை, தென்னுட்டின் அறிஞர் பெருமக்களேகூடி, அருமையான திட்டம் தீட்டுவர். அவர்களில் பலர் 'தனிநாடு' என்று பிரிவது தேவையில்லை, என்று எண்ணுபவர்களாக இருக்கலாம், ஆனுல், வடநாடு மிக மிக அதிகமாகத் தொழில்துறையில் முன்னேறிவிட்டது—தென்னுடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து வேதனை அடைந்தவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

ஆகவே, என் மீது சுடுசொல் வீசியோ, கேலி பேசியோ, அமைச்சர் தமக்கு ஏற்பட்டுள்ள எரிச்சலைக் காட்டிக்கொள்ளலாமே தவிர, நாட்டு மக்கள் உள்ளத்திலே கொதித்துக் குழம்பிக்கொண்டுள்ள அதிர்ப்தியை அடக்கிவிட முடியாது.

இந்தச் சூழ்நிலையில், ஆவேசமாகப் பேசுகிருர் என்றுநம்பி, யாரார் பாவம் எப்படி எப்படியோ குவித்த பணத்தை இலட்ச இலட்சமாக, இந்தத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களாக நின்று, இழந்துவிட்டு ஏங்கப் போகிருர்களோ!

அப்படிப்பட்ட பணப் பெட்டிகளைத் தேடிச் செல்லும் வேளை இது; எனவேதான் அமைச்சர் ஆர்ப்பரிக்கிருர்; அறைகூவல் விடுக்கிருர்!

மதுரையில் நான் பேசினபோது; இவ்வளவு எளிதில்முளைவிடும் என்று எண்ணவில்லை; இதோ அமைச்சர் ஆர்ப்பரிக்க வேண்டிய நிலைமை வேகமாக வளர்ந்துவிட்டது.

எனவே தம்பி,

**முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மோசம் போய்விட்டோம் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலாவது நாம் சரியான, நியாயம் பெறவேண்டும்.**

**தி. மு. க. 2000 கோடி ரூபாய் தென்னுட்டுக்கு ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்கிறது.**

**நாட்டு மக்களே! இதற்கு உங்கள் ஆதரவு தாருங்கள்.**

என்று, இல்லந்தோறும் எடுத்துச்சொல்லி, நாள் தவருமல் பணியாற்றுபவர், பதைக்கிருர், கதைக்கிருர், 'ஏனம்'. பலன் அளிக்கிறது நமது பிரசாரம் என்பது தெளிவாகிறது, எனவே புதிய உற்சாகத்துடன் பணிபுரியலாம், தம்பி, அமைச்சரின் ஆவேசப் பேச்சு அதற்கே பயன்படவேண்டும்.

அன்பன்,

அண்ணாதுரை



# உலக அரங்கில்

## சூயஸ்

★

சூயஸ் பிரச்சினை என்ன ஆகுமோஎன்கிற அச்சம் அதிகமாகியே வருகிறது. நாசர் "என்ன ஆனாலும் சரி! இரத்தம் சிந்தியாவது எமது உரிமையை நிலைநாட்டுவோம், வல்லரசுகளின் பயமுறுத்தலுக்குப் பணியோம்" என்று முழக்கமிட்டு வருகிறார். இந்நிலையில் கப்பல்கள் யாவும் சூயசைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று வல்லரசுகள் நடவடிக்கை எடுத்துள்ளன. கப்பல்கள் பாதுகாப்புடன் செல்ல உதவியளித்த 'பைலட்டுகளை'யெல்லாம் விலகும்படி, பிரிட்டிஷார் செய்துள்ளனர். அப்படி விலகிய பிரிட்டிஷாரின் இடங்களிலெல்லாம் ரஷ்யர்களையும் வேறு நாட்டுக்காரர்களையும் நாசர் நியமித்துக்கொண்டுள்ளார். சூயஸ் எகிப்துக்குத்தான் சொந்தம் என்று நிர்ணயமாகும் வரை தங்கள் இலட்சியப் போரை நிறுத்தப்போவதில்லை என்கிறது, எகிப்து.

✱

## அமெரிக்கா

★

பணக்காரனுக்கு எப்போதும் பணத்தில்தானே குறியாயிருக்கும்! சூயஸ் நெருக்கடி முற்றிக் கிடக்கிற இந்த நேரத்தில் அமெரிக்காவிலிருக்கிற 14-கம்பெனிகளின் முதலாளிகள் ஒன்றுகூடி சில முடிவுகளைச் செய்திருக்கிறார்கள். இவர்கள் எண்ணெய்க் கம்பெனி வைத்திருப்பவர்களாகும். சூயஸ் தகராறு முற்றினால் எண்ணெய் வளம் நிறைந்த அரேபிய நாடுகளிலிருந்து, ஐரோப்பாவுககு எண்ணெய் கிடைக்காதல்லவா? அக்குறையை நாங்கள் போக்குகிறோம் என்கின்றன இக்கம்பெனிகள்! ஆனால், அரேபிய நாடுகளிலிருந்து எண்ணெய் கொண்டு வருவதைவிட அமெரிக்காவிலிருந்து கொண்டுவர அதிகச் செலவு ஆகுமல்லவா? அதற்கும் இந்தக் கம்பெனிகள் வழி சொல்லுகின்றன. பணம் வேண்டுமா?—கடன் தருகிறோம்! என்பதாக. ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவை நாடினால், அமெரிக்கா எப்படி எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கலாம் என்பது குறித்தும் இந்த முதலாளிகள் இப்போதே திட்டம் தீட்ட ஆரம்பித்துவிட்டார்களாம்.

✱

## அல்ஜீரியா

★

சூயஸ் தகராறில் முக்கியபங்கு எடுத்துக்கொண்டு பிரிட்டனுடன் சேர்ந்துள்ள பிரான்ஸ், அல்ஜீரியாவுக்கு ஒரு அரசியல் அமைப்பைத் தர முன்வந்துள்ளது. காரணம் பலதொல்லைகளை ஒரே சமயத்தில் சமாளிக்க இயலாது என்பது தான். அந்த அரசியலமைப்பு, அல்ஜீரியாவுக்குச் சுதந்திரம் வழங்கும்தரத்தில் இல்லை எனவே, அல்ஜீரியா சுதந்திர வீரர்கள் இதை ஏற்பார்கள் என்று உறுதியில்லை. அல்ஜீரியாவின் சுதந்திரக் கிளர்ச்சியை, பக்கத்திலிருக்கும் டுனீசியாவும், மொராக்காவும் தீவிரமாக ஆதரித்து வருகின்றன. இந்த இரண்டும் அண்மையில் பிரெஞ்சுப் பிடிப்பிலிருந்து விடுபட்ட நாடுகளாகும். அல்ஜீரியாவுடன் ஒரு சமசரநிலை ஏற்படாவிட்டால், பிரான்சுக்கு, பெரிய தலைவலி ஏற்பட இருப்பது நிச்சயம். அல்ஜீரியா, மொராக்கோ, டுனீசியா முதலிய நாடுகள் எகிப்துக்கு அருகிலிருப்பவையாகும்.

✱

## சைப்ரஸ்

★

சூயஸ் எனும் தீயைக் கிளறிவிட்டுக்கொண்டிருக்கும் பிரிட்டன், எகிப்தை மிரட்ட சைப்ரசில் ஏராளமான துருப்புகளைக் கொண்டுபோய்க் குவிக்கத் துவங்கியுள்ளது. சைப்ரஸில் பிரிட்டனை எதிர்த்துப் போராட்டம் நடப்பதுதான் அனைவருக்கும் தெரியுமே! இந்தச் சூழ்நிலையில் எப்படியாவது சைப்ரசின் அனுதாபத்தைப் பெறவேண்டும் என்கிற எண்ணத்தில், 'சைப்ரசுக்கு சுயாட்சி தருவதாக' பிரிட்டன் ஆசைகாட்டியுள்ளது. சைப்ரஸ் மக்கள், கிரீசுடன் இணையவேண்டும் என்பதற்குத்தான் கிளர்ச்சி செய்கிறார்கள்! அதை மறுக்கும் பிரிட்டன், சுயாட்சி வழங்குவதாக ஆசைகாட்டியுள்ளது.

✱

## பிரிட்டன்

★

பிரதமர் ஈடன் துவக்கியுள்ள உலக நெருக்கடிபற்றி, பிரிட்டிஷ் மக்களிடையில் அதிருப்தி நிலவுவதாகத் தெரிகிறது. பார்லிமெண்டில் கடந்த கிழமை நடைபெற்ற வாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர்களான கெயிட்ஸ்கல்லும், பெவானும் கடுமையாகத் தாக்கிப் பேசினர். சைப்ரஸ்பற்றி நடைபெற்ற வாதத்தில் கலந்துகொண்ட நொயெல்பாகேர் எனும் பழைய மந்திரி "சைப்ரஸ் சுதந்திர இயக்கத்தை அடக்க நினைக்காதீர்கள். இப்படித்தான் 1921-ல் அயர்லாந்தை நினைத்தோம். கடைசியில் என்ன நடந்தது?" என்று எச்சரித்துள்ளார்.

✱

## அயர்லாந்து

★

பிரிட்டனுக் கருகிலிருக்கும் அயர், சூயஸ் பிரச்னையில் பிரிட்டனை ஆதரிப்பதாகத் தெரியவில்லை. சூயஸ் கால்வாயில் கப்பல் 'பைலட்டுகள்' பற்றாக்குறையை உண்டாக்கித் திண்டாட்டத்தை ஏற்படுத்தவேண்டுமெனப் பிரிட்டன் நினைக்கிறது அல்லவா? இதைக் கேள்வியுற்ற அயர், தான் 'பைலட்டுகள்' அனுப்புவதாக எகிப்துக்குத் தெரிவித்திருக்கிறதாம்.

★

# ★ அபூர்வ அறுப்பு முறை ★

மூன்றாண்டுகளுக்குமுன்பு தாய்லாந்தில் இரு பெண் குழந்தைகள் ஒன்றாக ஒட்டிப் பிறந்தன. ஓராண்டு கழித்துத் தனித்தனியே ரண சிகிச்சை (ஆப்பரேஷன்) மூலம் அக் குழந்தைகளை முதன் முதல் பிரித்தெடுத்தனர். இவ்வாறு தனித்தனியே பிரித்தெடுக்கப்பட்ட பின்னர் சிகாகோ பல்கலைக் கழகத்தின் பில்லிங்ஸ் ஞாபகார்த்த ஆஸ்பத்திரியை விட்டு இக் குழந்தைகள் புறப்பட்டன. இங்குதான் அக் குழந்தைகள் ஆப்பரேஷன் செய்யப்பட்டுத் தனித்தனியே பிரிக்கப்பட்டன. நாபித், பிரிஸ்ஸானு என்பவை அக் குழந்தைகளது பெயர்களாகும். மார்பிலிருந்து வயிறு வரை மார்பு முள்ளுடன் ஒட்டி இங்கு குழந்தைகள் பிறந்தன மருத்துவ வரலாற்றிலேயே முதன முதலாக ஓர் அமெரிக்க சர்ஜனாகிய டாக்டர் லெஸ்டர் ஆர். டிராக்ஸ்டட்டி என்பவர் ஆப்பரேஷன் செய்து வெற்றிகரமாக இவற்றைப் பிரித்தெடுத்தார். மிக முக்கியமான உறுப்பாகிய ஈரல் இருமடங்கு பெரிதாய் இருந்தது. அது அவ்விருவருக்கும் ஒன்றாய் இருந்ததை அவர்களுக்கிடையேபிரித்து இருவருக்கும் அதை வைத்தார். சிகாகோ ஆஸ்பத்திரியை விட்டு இவ்விரட்டைக் குழந்தைகள் புறப்பட்டபொழுது அவை பூரண சௌஸ்தமடைந்துவிட்டதாக டாக்டர்கள் கருதினர்.

அவர்கள் ஆப்பரேஷன் செய்யப்பட்டதிலிருந்து அவர்களுக்கு என்ன நேர்ந்தது? எவ்வாறு அவர்கள் இருந்து வருகின்றனர்? ஆப்பரேஷன் செய்யப்பட்ட பிறகு அதன் விளைவாக ஏதாவது அவர்களுக்கு ஏற்பட்டதா? அவர்கள் எதைப் போன்றிருக்கின்றனர் என்ற ஐயங்களுக்கெல்லாம் இனி விடை காண்போம்.

ஆப்பரேஷன் நடைபெற்ற இரு மாதங்களுக்குப் பிறகு இக் குழந்தைகள் தாய்லாந்திலுள்ள தங்கள் இல்லத்திற்குத் திரும்பின. எல்லின்ஸ் அட்கின்ஸன் என்னும் அமெரிக்கத் தம்பதிகள் இவர்களை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வதாக விருப்பம் தெரிவித்தனர். இதைக் கண்டு குழந்தைகளின் தாய் தந்தையர்களும் பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் மகிழ்வெய்தினர். அட்கின்ஸன் தம்பதிகளுக்கு முன்பே சொந்தமாக நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களில் எல்லாரிலும் இளையவனுக்குப் பதினாறு வயதாகும். குழந்தைகளை எவ்வாறு பராமரிப்பது என்பதை இவன் நன்கறிவான். இவ்வமெரிக்கத் தம்பதிகள் தாய்லாந்தில் இரண்டரை வருடங்களாக இருந்து வருகின்றனர். இவ்விரட்டைப் பிள்ளைகள் பிறந்ததிலிருந்தே இவர்கள்பால் பற்றுக்கொண்டுவிட்டனர்.

அவர்கள் பிரிக்கப்பட்ட ஆண்டிலிருந்து இந்த இரட்டைக் குழந்தைகள் அழகிய முறையில் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. வனப்புமிக்க சிறிய பெண் குழந்தைகளாக இவர்கள் காட்சியளிக்கின்றனர். இவர்கள் படிப்படியாக நல்வளர்ச்சி பெற்றிருக்கின்றனர். ஏனைய மூன்று வயதுடைய குழந்தைகளைப்போல் இவையும் இப்பொழுது இருந்துவருகின்றன. நடக்கின்றன, ஓடுகின்றன, மகிழ்ச்சியாக விளையாடுகின்றன. இரட்டையாகப் பிறந்த ஏனைய குழந்தைகள்போல் தாங்கள் விரும்பும்போது தனித்தனியே எதையும் செய்கின்றன அல்லது ஒன்றாகச் சேர்ந்து ஏதாவது செய்து மகிழ்கின்றன.

இக்குழந்தைகள் வனப்பு மிக்கவையாய் இருப்பதுடன் நுண்ணறிவு படைத்தனவாகவும் இருக்கின்றன. இவற்றிற்கு இரு மொழிகள் தெரியும். ஒன்று சுதேச மொழியாகிய சியாம் மொழி, மற்றொன்று ஆங்கிலம். இக்குழந்தைகள் பூரணமாகப் புரிந்துகொண்டாலும், தங்கள் பேச்சுக்களை வார்த்தைகளோடு நிறுத்திவிடுகின்றன.

இக்குழந்தைகள் மிக நல்ல ஆரோக்யத்துடன் இருக்கின்றன என்றும் இவர்கள் சேர்ந்திருந்த பாகத்தின் மார்பெலும்புக்கூடு சிறிது உயர்ந்திருக்கிறதென்றும் அவர்கள் பிரிக்கப்பட்ட பிறகு ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாறுதல் இது ஒன்றே என்றும் திருமதி அட்கின்ஸன்கூறினர். மார்புக்கூடு வளர்ந்து அவையெல்லாம் மறைந்துவிடும் என்று டாக்டர்கள் சொல்கின்றனர். உண்மையில், இப்பொழுது கூட அதுமறைந்துவிடுவது பிரத்தியட்சமாகத் தெரிகிறது என்று திருமதி அட்கின்ஸன் கூறினர்.

நாபித் பிர்ஸானு என்னும் இப்பெயர்கள் அவ்விரட்டைக் குழந்தைகளுக்குப் பாங்காக் ஆஸ்பத்திரி சிப்பந்திகளால் இடப்பட்டனவாகும். அக்குழந்தைகளுக்குப் பெயரிட உதவி செய்யும் அளவுக்கு அங்குள்ள டாக்டர்களுக்கும் நர்சுகளுக்கும் அவை செல்லமாகிவிட்டன.

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் [illegible] அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.